Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 27 திங்கட்கிழமை (11-03-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:106

## பிரபாவுக்கான நோட்டீஸ் பிரதமரின் விலாசத்துக்கு!

### 'சிஹல உறுமய' அனுப்பியது

கொழும்பு,மார்ச்11

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிராக 'சிஹல உறுமய' மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில், பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு வழக்குத் தொடர்பான நோட்டீஸ் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஆனால் அது ஏற்கப்படாமல் அனுப்பியவர்களுக்கே திருப்பி அனுப்பப்பட்டது.

மனுதாரர் என்ற முறையில் சிஹல உறுமயத் தலைவர் திலக் கருணாரத்ன இந்த நோட்டீஸை அனுப்பி

(12ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோரின் உறவினர்கள் செயலகம் முன் மீண்டும் மறியற்போர்

யாழ்ப்பாணம்,மார்ச்11

வடபகுதியில் கைதாகிக் காணாமற்போனவர்களின் பாதுகாவலர்கள் எதிர்வரும் 14ஆம் திகதிமுதல் யாழ். செயலகம் முன் தொடர்ச்சியாக மறியற்போராட்டம் மேற்கொள்வதென முடிவு செய்துள்ளனர்.

கோட்டை முனியப்பர் ஆலய முன்றிலில் நேற்று நடைபெற்ற கைதானோரின் அன்னையர் முன்னணியின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் விடயம் தொடர்பாக யாழ்.அரச அதிபரை இன்று சந்தித்துக் கலந்துரையாடுவது என்றும் -

ஏற்கனவே தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்குச் சாதகமான பதிலை அரச அதிபர் தராதபட்சத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் அரசியல் கட்சிகளின் ஆதரவு இன்றி சுயாதீனமான முறையில் செயலகம் முன்பாக மறியறபோராட்டம் மேற்கொள்வது என்றும் - நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(ஐ-3)

## விந்துனுவெவ படுகொலை விசாரணை

கொழும்பு,மார்ச்11

பண்டாரவளை விந்துனுவெவ தடுப்பு முகாமில் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பான வழக்கு விசாரணை இன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆரம்பமாகின்றது.

இந்த வழக்கில் 10 பொலீஸார், 31 பொதுமக்கள் ஆகியோர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 27 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டதும் 20 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததும் தெரிந்ததே. (ஐ-3)

# ஆசிய நாடு ஒன்றில் 2 மாதங்களில் பேச்சு!

## நோர்வே அதிகாரிகள் தகவல்

ஒஸ்லோ,மார்ச்11

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் இன்னும் இரு மாதங்களில் ஆரம்பமாகலாம். இலங்கைக்கு அருகில் உள்ள ஓர் ஆசிய நாட்டில் பேச்சுக்கள் நடைபெறக் கூடிய சாத்தியம் உள்ளது.**

**நோர்வேயின் விசேட சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்மும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளும் இந்த நம்பிக்கையை ஒஸ்லோவில் வெளியிட்டிருக்கின்றனர்.**

ஐரோப்பிய நாடொன்றில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறுவது நடைமுறைச் சாத்தியமானதல்ல. பேச்சுக்களில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் அடிக்கடி இலங்கை சென்று தமது தலைவர்களுடன் ஆலோசனை நடத்த வேண்டியிருக்கும். இதனால் பேச்சுக்கள் ஆசியநாடொன்றிலே நடைபெற வேண்டும் என்பது நோர்வே அதிகாரிகளின் கருத்தாக இருக்கிறது.

நோர்வே அதிகாரிகள் தெரிவித்திருக்கும் ஏனைய விடயங்கள் வருமாறு:-

- கொழும்பிலும் கிளிநொச்சியிலும் யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களின் இணைப்புக் காரியாலயங்கள் நிறுவப்படும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு விஜயத்தின்போது

## அமைச்சர் மகேஸ்வரன் கரிகாலனைச் சந்தித்தார்

மட்டக்களப்பு,மார்ச்11

மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்ட இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலனை நேற்றுக் காலை சந்தித்து ஒரு மணிநேரம் கலந்துரையாடினார்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற விசேட பூசைகளில் கலந்து கொண்ட அமைச்சர் மகேஸ்வரன், அதன்பின் கொக்கட்டிச்சோலையில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் கரிகாலனைச் சந்தித்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் சேதமடைந்த ஆலயங்களைப் புனரமைக்க தேவையான உதவிகளைத் தமது அமைச்சு வழங்கவிருக்கின்றது என்று அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

ஆலயங்களைப் புனரமைக்கத் தேவையான ஒத்துழைப்பை அமைச்

(12ஆம் பக்கம் பார்க்க)

### மன்னார் - குறிகாட்டுவான் கப்பல் சேவையில்

## பயணிகள் 50 கிலோ பொருள்களை தம்முடன் எடுத்துச் செல்ல அனுமதி

### ஏற்பாடுகளைப் பார்வையிட அதிகாரிகள் இன்று வருவர்

யாழ்ப்பாணம்,மார்ச்11

குறிகாட்டுவானுக்கும் மன்னாருக்கும் இடையே எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ஆரம்பமாக இருக்கும் பயணிகள் கப்பல் சேவை தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்க 'றான்' அதிகாரிகள் மற்றும் கப்பல் சிப்பந்திகள் அடங்கிய குழு ஒன்று இன்று யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளது.

இந்தக் குழுவினர் குறிகாட்டுவானுக்குச் சென்று கப்பல் சேவைக்கான ஏற்பாடுகளை அங்கு பார்வையிடுவர்.

நேற்று இக்குழுவினர் மன்னாருக்குச் சென்று கப்பல் சேவை தொடர்பான ஏற்பாடுகளை ஆராய்ந்தனர். மன்னார் அரச அதிபர் சி.விஸ்வலிங்கத்தையும் குழுவினர் சந்தித்தனர்.

பயணிகள் சேவையில் ஈடுபட இருக்கும் மாலைதீவு நிறுவனத்துக்குச் சொந்தமான கப்பல் எதிர்வரும் 14ஆம் திகதி குறிகாட்டுவானுக்கு வந்தடையும். மறுநாள் அங்கிருந்து முதலாவது சேவை ஆரம்பமாகும் குறிகாட்டுவானில் இருந்து புறப்பட்டு சுமார் இரண்டு, இரண்டரை மணிநேரத்துக்குள் கப்பல் மன்னாரைச் சென்றடையும் அங்கிருந்து பயணம் மேற்கொள்ள போதியளவு பயணிகள் இருப்பின் அன்றைய தினமே அங்கிருந்து இரண்டாவது சேவை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கப்பலில் 150 பயணிகள் செல்ல முடியும். அவர்களுக்கு தேநீர் மற்றும் சிற்றுண்டிகள் கப்பலுக்குள் வழங்கப்படும்.

பயணி ஒருவர் தம்முடன் 50 கிலோவுக்கு மேற்படாத பொருள்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவர். ஒரு வழிப்பயணக் கட்டணமாக 950 ரூபா அறவிடப்படும்.

குறிகாட்டுவானில் இருந்து மன்னார் செல்லும் பயணிகள் அங்கிருந்து வவுனியா ஊடாக கொழும்பு செல்வதற்கான இணைப்பு பஸ் சேவையை ஆரம்பிக்க வவுனியா அரச அதிபர் கே.கணேஸ் நடவடிக்கை எடுத்துவருகிறார். (ஐ)

## தெற்கு நகரங்களிலும் 'பொங்கு தமிழ்' நடத்துக!

### தேரரின் வேண்டுகோள் இது

கொழும்பு,மார்ச்11

தமிழ்மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் நம்பிக்கையைக் கட்டி எழுப்பும் வகையில் காலி, மாத்தறை உட்பட தெற்கு நகரங்களில் 'பொங்கு தமிழ்' நிகழ்வுகளை ஏற்பாடு செய்யவேண்டும்.

- இப்படிக் கூறியுள்ளார் சமாதான ஆர்வலரான வண.மககல்கடவ புஞ்ஞாசார தேரர்.

இது விடயமாக அவர் அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்.

இனவாதக் கட்சிகளும் அமைப்புக்களும் கூறுவது போன்று 'பொங்கு தமிழ்' நிகழ்வு மூலம் பிரிவினை ஏற்பட்டு விடப்போவதில்லை. அதற்கு மாறாக இரு இனங்களுக்கும் இடையில் உள்ள இடைவெளி நீங்க வழி பிறக்கும்.

சிஹல உறுமய, ஜே.வி.பி. போன்றவை இன்று இனவாதம் பேசி அரசியல் ஆதாயம் தேட முனைகின்றன - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## மட்டக்களப்பு நகரில் புலிகளின் அலுவலகம் 22ஆம் திகதி திறப்பு

### 50 போராளிகள் அங்கு செல்ல ஏற்பாடு

கொழும்பு,மார்ச்11

மட்டக்களப்பு நகரப் பகுதியில் எதிர்வரும் 22ஆம் திகதி தமது அரசியல்துறை அலுவலகத்தை விடுதலைப் புலிகள் திறக்கவிருக்கின்றனர்.

புரிந்துணர்வு உடன்பாட்டின் கீழ் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமது அலுவலகங்களைத் திறந்து, அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க புலிகள் நடவடிக்கை எடுத்துவருகின்றனர். இதற்கான முன் முயுற்சிகளில் புலிகளின் ஆதரவாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

எதிர்வரும் 22ஆம் திகதி மட்டக்களப்பு நகருக்குள் வர 50போராளிகளுக்கு அனுமதி வழங்கும்படி தெரிவித்து மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை 233ஆவது படையணித் தளபதியைக் கேட்டுள்ளது.

50 போராளிகளின் பெயர் விவரங

(12ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில்

## புலிகளோடு செயற்பட வரதர் அணி விருப்பம்

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அந்த அணியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் ஆர்.துரைரட்ணம் இப்படிக் கூறியுள்ளதாக இலங்கை வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

எங்கள் உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரப்பட்டால் ஆயுதங்களைக் கையளித்து விட்டு விடுதலைப் புலிகளோடு இணைந்து செயற்பட நாங்கள் விரும்புகிறோம் - என்று துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

வவுனியாவில் இயங்கும் தமிழ்க் குழுக்கள் தம்வசம் உள்ள ஆயுதங்களைக் கையளிக்க இன்றுவரை அவகாசம் வழங்கப்பட்டுள்ள போதிலும் தாங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கப் போவதில்லை என்று வரதர் அணியின வவுனியா அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்






யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையின் மணிவிழா நேற்று நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது.

மணிவிழா நாயகர் தம்பதிகள் மேடையில் அமர்ந்திருப்பதையும் விழா நாயகர் உரையாற்றுவதையும் விழாவில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: பொ.இராஜேஸ்வரன்)*

# தமிழக மதகுரு தலைமையில் பக்தர்கள் கச்சதீவு வருகை!

நெடுந்தீவு,மார்ச்11

பிரசித்திபெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்றுக் காலை நடந்த வருடாந்தத் திருவிழாவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குருமார்களுடன் இந்தியக் குருமார்களும் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

நேற்றுக் காலை 7 மணிக்கு முதலாவது திருப்பலியும், முற்பகல் 10 மணிக்கு இரண்டாவது திருப்பலியும் அதைத் தொடர்ந்து புனிதரின் திருச்சொரூப பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றன.

நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு.எம்.எல்மொன்பேட், தமிழகத்தைச் சேர்ந்த அருட்திரு.லசர் அருள்ராஜ் ஆகியோர் இந்த நிகழ்வுகளை நடத்தினர்.

தீவுப்பகுதிகளில் இருந்தும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் சுமார் ஐந்நூறு பக்தர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

தமிழகத்தில் இருந்து அருட்திரு. லசர் அருள்ராஜ் தலைமையில் வள்ளங்களில் வந்த 20 பேரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நேற்றைய பூசைகளில் கலந்து கொள்ள தமிழகத்தில் இருந்து வள்ளங்களில் மீனவர்கள் கச்சதீவுக்கு வரத் திட்டமிட்டிருந்தனர் என்றும் - தமிழக பொலீஸ் அதிகாரி விடுத்த திடீர் தடை உத்தரவுகாரணமாக இறுதி நேரத்தில் அவர்கள் அதனைக் கைவிட்டனர் என்றும் -

அருட்திரு. லசர் அருள்ராஜ் தெரிவித்தார்.

கடவுச்சீட்டு, விஸா ஆகியன பெற்று வழமையான குடிவரவு, குடியகல்வுச் சட்டங்களுக்கு அமைவாகவே கச்சதீவுக்கு மீனவர்கள் செல்ல முடியும் எனப் பொலீஸ் அதிகாரி தனது உத்தரவில் தெரிவித்திருந்ததாகக் கூறப்படுகிறது.

இது ஒரு சமய நிகழ்ச்சி என்பதால் மதகுருவான தம்மை கச்சதீவுக்குச் செல்ல அவர்கள் அனுமதித்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# கைதிகள் விடுவிப்பு விவகாரத்தை கையாள தனியான அலுவலகப்பிரிவு

## சட்டமா அதிபர் அமைப்பு

கொழும்பு,மார்ச்11

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பான விவகாரத்தைக் கையாள விசேட பிரிவு ஒன்று சட்டமா அதிபர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசன் மேற்கண்ட தகவலை புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கு தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி கோரி அமைச்சர் கடிதம் ஒன்றை சட்டமா அதிபருக்கு அனுப்பியிருந்தார்.

கைதிகளின் விடுதலை தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அமைச்சருக்கு சட்டமா அதிபர் அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது திணைக்களத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட பிரிவு மூலம் கைதிகளின் கோவைகள் தனித்தனியாக ஆராயப்படுகின்றன. சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரிகளுடன் இந்தப் பிரிவு அதிகாரிகள் கலந்துரையாடல்களை நடத்துகின்றனர். கைதிகள் பொலீஸாருக்கு அளித்த ஒப்புதல் வாக்கு மூலங்களை ஆராய்ந்து முடிவுகளை உடனுக்குடன் எடுத்து வருகின்றனர்.

இந்தப் பிரிவில் பணிபுரியும் மூன்று சட்டத்தரணிகளுக்கான சம்பளங்கள் நிதி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படுகின்றன.

கைதிகள் தொடர்பான கோவைகளை ஆராய்ந்து, அவர்கள் தொடர்பான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த விசேட ஆளணியினர் துரிதமாகச் செயற்படுகின்றனர்.

அண்மைக்காலத்தில் விடுத்த உத்தரவுகளின் பிரகாரம் பல கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்; பலர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ்க் கூட்டமைப்பின் பிரமுகர்களான ஏ.சி.எஸ்.பத்மநாதன், கே.ஜெயபாலசிங்கம் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ஐ-3)

# சென்னை நகரில் நேற்று கருணாநிதி உண்ணாவிரதம்!

சென்னை,மார்ச்11

சென்னை சேப்பாக்கம் தொகுதியில் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி நேற்று உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரான கருணாநிதி, தனது தொகுதியில் திறந்து வைத்த அலுவலகம் சில நாள்களின் முன்னர் அடித்து நொறுக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலுக்கு காரணமானவர்களை கைதுசெய்யும்படி தமிழக அரசை வற்புறுத்தியே கருணாநிதி உடைக்கப்பட்ட தனது அலுவலகம் முன்பாக உண்ணாவிரதமிருந்தார்.

தாக்குதல் சம்பவத்துக்கு காரணமானோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதாக பொலீஸ் உயர் அதிகாரிகள் வாக்குறுதி வழங்கியதையடுத்து, கருணாநிதி தனது உண்ணாவிரதப் போராட்டத்தை இரண்டு மணித்தியாலங்களில் முடித்துக்கொண்டார்.

### தலைமையகத்தில் நடந்த கொடூரம்

# கடற்படைப் பெண் அதிகாரிக்கு கசப்பான களியாட்ட விருந்து!

கொழும்பு,மார்ச்11

கடற்படைத் தலைமையகத்தில் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்ற இரவுக் களியாட்ட விருந்தொன்றில் கலந்துகொண்ட ஒருபெண் உத்தியோகத்தர் கடற்படைச்சிப்பாய் ஒருவரினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார் எனக்கூறப்படும் ஒரு சம்பவம் குறித்து செய்திகள் வெளியாகியுள்ளன.

கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்தில் ஓய்வுபெற்ற சேவைத்தர அதிகாரிகள் ஒழுங்குசெய்த களியாட்ட விருந்து ஒன்று இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு விட்டுப் பிரஸ்தாபப் பெண் உத்தியோகத்தர் தனது விடுதி அறைக்குச் சென்றார்.

சிறிது நேரத்தின் பின்னர் - நள்ளிரவு தாண்டி 1.30 மணியளவில் - அறைக்கதவை கடற்படைச் சிப்பந்தி ஒருவர் தட்டினார். கதவைத் திறந்த பெண் உத்தியோகத்தர் மீது பாய்ந்து அவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவம் கற்பழிப்பா அல்லது பாலியல் பலாத்காரமா என்பது பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கடற்படையின் மிக உச்சப் பாதுகாப்பு உள்ள தலைமையகத்தில் - அதிகாரி தரத்தில் உள்ள ஒருவர் மீது - இத்தகைய வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது போன்ற சம்பவம் கடற்படையின் 53வருடகால வரலாற்றில் முன்னெப்போதும் நடந்ததில்லை என்று இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். (ஐ)

# குடாநாட்டின் பலபகுதிகளிலும் மக்களைச் சந்திப்பார் சங்கரி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய வீ.ஆனந்தசங்கரி நாளை 12 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதிவரை யாழ்.குடாநாட்டின் பலபகுதிகளுக்கும் விஜயம் செய்து பொது மக்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

நாளை 12 ஆம் திகதி பிற்பகல் நல்லூர் பிரதேசத்தில் உள்ள மக்களுடனும், மறுநாள் 13 ஆம் திகதி மல்லாகம் பகுதியில் உள்ளமக்களுடனும், 14 ஆம் திகதி பத்தைமேனி, புத்தூர், இடைக்காடு முதலிய பகுதிகளில் வசிக்கும் மக்களுடனும் அவர் கலந்துரையாடுவார்.

16 ஆம் திகதி சாவகச்சேரிக்குச் சென்று மக்களைச் சந்திப்பார். 17 ஆம் திகதி நெல்லியடியில் பொது மக்களைச் சந்திக்கவுள்ளார்.

இப்பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் ஆகிய இடங்களில் பொது மக்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்படவுள்ளது.(ஐ-ரி)

# மின்சாரக் கட்டணம் 20 சத வீதத்தால் உயரும்

கொழும்பு,மார்ச்11

மின்சாரக் கட்டணத்தை 20 சத வீதத்தால் அதிகரிப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருகின்றது.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மின்சார விநியோகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலை குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மின்சாரத்தை வழங்க பல தனியார் நிறுவனங்கள் முன்வந்துள்ளன என்றும் - அதற்காக வங்கி மூலம் கடன் வசதி பெற்றுத் தருமாறு அந்த நிறுவனங்கள் கோருகின்றன என்றும் - அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

தனியாரிடம் இருந்து மின்சாரத்தைப் பெறுவதால் ஏற்படும் செலவீனத்தைச் சமாளிக்க மின்கட்டணத்தை 20 சதவீதத்தால் அதிகரிக்கலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-3)

## மருந்தாளர் பரீட்சை

கோப்பாய்,மார்ச்11

இலங்கை மருத்துவக் கல்லூரிச் சபையில் பதிவுசெய்த மருந்தாளர் பயிற்சிநெறி மாணவர்களுக்கான (வெளிவாரி) மருந்தாளர் டிப்ளோமா பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது.

பதிவு செய்த மாணவர்கள் இம் மாத இறுதிக்கு முன்பாக பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டும். (ஐ-72)

VESTA

# உடன் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு நெல்லிப்பானம் உற்பத்தி செய்வதற்கு ஆயுர்வேத மருத்துவ ...ருளை நெல்லி பெருந்தொகையாகத் தேவைப்படுகின்றது. இக் காலப் பகுதியில் நெல்லிமரத்தில் இருந்து அறுவடை செய்யும் காலமாக இருப்பதனால் உங்களிடம் நெல்லிக்கனிமரம் இருந்தால் உடனடியாக அறியத்தரவும். நாங்கள் நேரடியாக வந்து கொள்வனவு செய்து அறுவடை செய்வோம்.



தொடர்புகொள்ளவேண்டிய முகவர்:

வெஸ்ரா இன்ரஸ்ரீட்,
குழப்பிட்டி றோட்,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

(1546)

# ஜெயலலிதாவும் கருணாநிதியும் 13 வருடங்களின் பின் சந்திப்பு!

## ஆனாலும் முகமன் கூறவில்லை

சென்னை,மார்ச்11

தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி யும், தமிழக முதல்வர் ஜெயலலிதா வும் 13 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் நேருக்கு நேர் சந்தித் துக்கொண்டனர். ஆனால் இருவரும் ஒருவருக் கொருவர் வணக்கம் தெரி விக்கவோ, பார்த்துக்கொள்ளவோ இல்லை.





அ.தி.மு.க. ஆட்சி அமைந்த பின்னர் சேப்பாக்கம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினராகிய மு.கருணாநிதி முதற்ற டவையாக நேற்றுமுன்தினம் பேரவைக்கு சென்றிருந்தபோதே அங்கிருந்த முதல் வர் ஜெயலலிதாவை சந்திக்க நேரிட்டது.

1989ஆம் ஆண்டு அப்போதைய முதல் வர் மு.கருணாநிதியை எதிர்க் கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதாவும் அவரது சகாக்களும் உரையாற்ற விடாது தடுத்ததாகவும், அப்போது ஜெயலலிதா தாக்கப்பட்டதாகவும் கூறப்படும் சம்பவத்தின் பின்னர் இரு தலைவர்களும் பொது நிகழ்ச்சி களிலோ, அரசியல் நிகழ்வுகளிலோ சந்தித்துக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

# இரத்த தானம் செய்வதில் ஜேர்மனிய நபர் சாதனை!

இரத்த தானம் செய்வதில் ஜேர் மனியைச் சேர்ந்த பிராவ் லூஸோ (வயது 58) என்பவர் சாதனை படைத் துள்ளார்.

இவர் தனது வாழ்நாளில் இது வரை 800 தடவைகள் இரத்ததானம் செய்துள்ளார். தனது 25 வயதில் இருந்து இரத்த தானம் செய்யத் தொடங்கிய இவர், இதுவரையில் 480 லீற்றர்கள் இரத்தத்தைத் தான மாக பிறருக்கு வழங்கியுள்ளார்.

தொடக்கத்தில் பணத்துக்காக தனது இரத்தத்தை விற்று வந்த இவர், 1979ஆம் ஆண்டுமுதல் இலவச மாக இரத்த தானம் செய்து வருகி றார். அத்துடன் அதுவரையில் இரத் தம் வழங்கியதற்காகத் தான் பெற்ற பணத்தினை செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழுவிடம் வழங்கிவிட்டார். (ஒ-4)

# இஸ்ரேலியப் பிரதமர் இல்லமருகே பலஸ்தீன தற்கொலைத் தாக்குதல்!

## 9 யூதர்கள் பலி; 50பேர் காயம்!!

ஜெருசலேம்,மார்ச்11

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அருகே பலஸ்தீனத் தற் கொலை குண்டுதாரி மேற்கொண்ட தாக்குதலில் 9 இஸ்ரேலியர்கள் கொல் லப்பட்டனர். இதற்கு முன்பாக நிகழ்ந்த மற்றொரு சம்பவத்தில் பெண் மற் றும் குழந்தை உட்பட 3பேர் உயி ரிழந்தனர்.

மேற்கு ஜெருசலேமில் உள்ள ஷெரோனின் இல்லத்திலிருந்து சில மீற்றர்கள் தொலைவில் இருந்த உணவு விடுதியொன்றில் நேற்றுமுன் தினம் இரவு இத்தாக்குதல் இடம் பெற்றது.

யூதர்களின் வார இறுதிவழிபாடான 'சபாத்' முடிந்த பின்னர் மக்கள் நிரம் பியிருந்த உணவு விடுதிக்குள் நுழைந்த பலஸ்தீனர் ஒருவர் கூட் டத்தின் மத்தியில் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்க வைத்து இறந்தார். இதில் 11 இஸ் ரேலிய யூதர்கள் உயிரிழந்தனர்; ஐம் பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந் தனர்.

பௌட் ஹுரானி(வயது 21) என்ற தமது இயக்க உறுப்பினரே இந்தத் தற்கொலைத் தாக்குதலை மேற் கொண்டதாக பலஸ்தீனத் தீவிரவாத இயக்கமான ஹமாஸ் அறிவித்துள் ளது.

இந்தத் தாக்குதல் நடைபெறுவ தற்கு முன்பாக வடக்கு இஸ்ரேலிய நகரான நேதன்யாகுவில் வார இறுதி வழிபாட்டை முடித்துக்கொண்டு உணவுச்சாலையொன்றில் நின்றி ருந்தவர்கள் மீது பலஸ்தீனத் துப் பாக்கிதாரிகள் கண்மூடித்தனமாகச் சுட்டதில் யூதப் பெண்மணி மற்றும் அவரது 9 மாதப் பெண்குழந்தை உட்பட 3 இஸ்ரேலியர்கள் கொல் லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முன்பாக உணவு விடுதிக்குள் கைக் குண்டு ஒன்று எறியப்பட்டதாகவும்-

அது வெடித்ததில் அச்சமுற்று கடைக்கு வெளியே ஓடி வந்தவர் களை வாசலில் நின்றபடி துப்பாக்கி தாரிகள் சுட்டதாகவும் -

சுமார் 15 நிமிடங்கள் இந்தத் தாக்குதல் நீடித்ததாகவும் -

சம்பவத்தில் உயிர்தப்பியவர்கள் தெரிவித்தனர்.

இந்தத்தாக்குதலில் ஈடுபட்ட 4 பலஸ்தீனத் தீவிரவாதிகளில் மூவர் இஸ்ரேலியப் பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஒரு தீவிரவாதி தப்பிச் சென்றுள்ளார்.

பலஸ்தீன அகதிமுகாம்களில் பலஸ்தீனத் தீவிரவாதிகளைத் தேடு வதாகக் கூறிக்கொண்டு அப்பாவி பலஸ்தீனர்களைக் கொன்று குவிக் கும் இஸ்ரேலுக்குப் பதிலடியாகவே இந்தத் தாக்குதலைத் தாம் நடத்தி யதாக பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் 'பதாஹ்' குழுவுடன் இணைந்து செயற்படும் அல் அகுஷா படையணி என்ற அமைப்பு அறிவித் துள்ளது.



பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதலில் சிக்கியோர் மருத்துவ மனைக்குக் கொண்டுசெல்லப்படுகிறார்கள்.

சனிக்கிழமைகளில மாலை நேரத் தில் வார இறுதிவழிபாடான 'சபாத்' பிரார்த்தனையை மேற்கொள்வது இஸ்ரேலிய யூதர்களின் மத வழக் கம். அன்றைய தினத்தில் உணவு விடுதிகளிலேயே யூதர்கள் உண வருந்தி வருகின்றனர். கடந்த சில வாரங்களாகவே 'சபாத்' பிரார்த் தனையை முடித்துக்கொண்டு உணவு விடுதிகளில் திரண்டு நிற்கும் இஸ் ரேலியர்களை இலக்குவைத்து பலஸ்தீனத் தீவிரவாதிகள் தாக்குதல் களை மேற்கொள்கின்றனர். (ஒ)

# ஆப்கானில் இறுதித் தாக்குதலுக்கு தயாராகின்றது அமெரிக்கப்படை

வாஷிங்ரன்,மார்ச்11

ஆப்கானிஸ்தானில் தலிபான் மற் றும் அல்கெய்டா போராளிகள் தங்கி யிருப்பதாகக் கூறப்படும் மலைக் குகைகள் மீது தமது இறுதிக்கட் டத் தாக்குதலை மேற்கொள்ளத் தயா ராகிக் கொண்டிருப்பதாக அமெரிக்க இராணுவத்தினர் தெரிவித்தனர். ஆயினும் எதிர்பார்ப்பதைவிட இந்த இராணுவ நடவடிக்கை அதிக நாள் கள் நீடிக்கும் என்றும் அவர்கள் கூறி யுள்ளனர்.



ஆப்கானில் பனிக்குளிரில் தீ மூட்டிக் குளிர்காயும் அமெரிக்கப் படையினர்

கிழக்கு ஆப்கானிஸ்தானின் மலைக் குகைகள் மற்றும் பதுங்கு குழிகள் மீது 'அனகொண்டா' என்று பெயரிடப்பட்ட படைநடவடிக்கையை 9 நாள்களுக்கு முன்னர் ஆரம்பித்த அமெரிக்கா தலைமையிலான கூட் டுப்படைகள் அப்பிரதேசத்தில் பதுங்கி யிருந்த போராளிகளின் பதில் தாக்கு தலால் தற்போது பின் வாங்கியிருப் பதாகக் கூறப்படுகிறது.

இதேசமயம், அப்பகுதியில் மோசமான காலநிலை மற்றும் பனிப் பொழிவு காரணமாக கூட்டுப் படை வீரர்களால் மலைப் பகுதியில் ஏற முடியவில்லை என்றும் - ஆகவே தமது நடவடிக்கைகள் தற்காலிக மாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக வும் - அமெரிக்க இராணுவப் பேச் சாளர் மேஜர் பிரயன் ஹில்பேர்டி கூறினார்.

கடந்த ஒக்ரோபரில் ஆப்கானிஸ் தானில் பயங்கரவாதத்துக்கு எதி ரான போரை ஆரம்பித்த அமெரிக்கா மிகவும் ஆபத்தான நடவடிக்கையை தற்போது மேற்கொண்டிருப்பதாக அமெரிக்க அதிபர் புஷ் ஒப்புக்கொண் டார்.

குறைந்தது 8அமெரிக்க இராணு வத்தினரும், 7ஆப்கான் அரசுப் படை யினரும் 'அனகொண்டா' நடவடிக்கை யில் உயிரிழந்திருப்பதாக சுயா தீனச் செய்திகள் தெரிவித்தன. நூற் றுக்கணக்கான போராளிகள் விமா னத் தாக்குதலில் உயிரிழந்ததாக் அமெரிக்கா கூறுகிறது.

இது ஒருபுறமிருக்க, தலிபான் மற்றும் அல்கெய்டா போராளிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை களில் உள்நாட்டுப் படையினரை அமெரிக்கா பலிக்கடாக்களாக்குவ தாக ஆப்கான் தளபதிகள் குரல் எழுப்பத் தொடங்கியுள்ளதாகக் கூறப் படுகிறது. (ஒ)

# இஸ்ரேலிய ஹெலி தாக்குதலில் அரபாத்தின் அலுவலகம் தகர்ப்பு!

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அர பாத்தின் காஸா பிரதேச தலைமை அலுவலகம் நேற்றுக் காலை இஸ் ரேலியக் ஹெலிகளின் தாக்குதலில் தகர்க்கப்பட்டது.

நெதன்யாகு மற்றும் ஜெருசலே மில் பலஸ்தீனர்கள் நேற்றுமுன்தின மிரவு நடத்திய தாக்குதல்களுக்குப் பதிலடியாகவே அரபாத்தின் அலு வலகம் தகர்க்கப்பட்டதாகக் கருதப் படுகிறது.

இஸ்ரேலியக் ஹெலிகள் சுமார் 30 ஏவுகணைகளை ஏவி அரபாத்தின் அலுவலகம் மற்றும் பாதுகாப்பு வளா கம் ஆகியவற்றை முற்றாகத் தகர்த்த தாகக் கூறப்படுகிறது.

கடந்த மூன்று மாதகாலமாக ரமழா நகரை விட்டு வெளியேற அர பாத்துக்கு இஸ்ரேலியப் படைகள் அனுமதி மறுத்திருப்பதால் காஸா நகர அலுவலகத்தில் அரபாத் இருக்கவில்லை என்றும் -

இந்தச் சம்பவத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் - பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

# மியான்மர் அரசுக்கு எதிராகச் சதி; வர்த்தகர் கைது!

யாங்கூன்,மார்ச்11

மியான்மரின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் நியுவின் குடும்ப அங்கத்தவர் நால்வர் மீது அரசைக் கவிழ்க்க சதி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டனர்.

ஓசை அரங்கில்

நியுவின்னின் மருமகனும், பிரபல வர்த்தகருமான ஐஸ்வரின் மற்றும் அவரது பேரர்கள் மூவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது வர்த்தக சுயலா பத்துக்காகவே அரசுக்கெதிரான சதி யில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-4)

# 'ஹம்பிள்' பழுது பார்க்கும் பணி வெற்றிகரமாக முடிந்தது

நாஸா,மார்ச்11

'ஹம்பிள்' விண்வெளித் தொலை நோக்கியை சீரமைத்து மீண்டும் அதன் சுற்றுப்பாதையில் செலுத்தும் பணி யில் 'கொலம்பியா' விண்கல வீரர் கள் வெற்றி கண்டனர்.

'கொலம்பியா' விண்கலத்தில் விண்வெளிக்குச் சென்ற 7 வீரர்களில் இருவர் விண்ணில் மிதந்து, தொலை நோக்கியில் குளிர்விப்பு சாதனத்தை வெற்றிகரமாகப் பொருத்தியதாக 'நாஸா' விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

1999ஆம் ஆண்டிலிருந்து செயற் படாமலிருந்த தொலைநோக்கியின் குளிர்விப்பு சாதனத்துக்குப் பதிலாக புதிய சாதனம் பொருத்தப்பட்டதாக வும் -

1990ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டதிலிருந்து 'ஹம்பிள்' தொலைநோக்கியில் மேற்கொள்ளப் பட்ட 4 பழுதுபார்ப்புப் பணிகளில் இதுவே மிகவும் சிக்கலான பணி என்றும் -

கூறப்படுகிறது. (ஒ-4)

# தஞ்சம் கோருவோர் குறித்து மன்னிப்புச்சபை கோரிக்கை

கன்பரா,மார்ச்11

ஆஸ்திரேலியாவுக்குள் தஞ்சம் கோரி வரும் அகதிகளின் மனித உரிமைகள் தொடர்பாக அந்த நாடு மேலும் அதிக கவனம் செலுத்தவேண் டும்.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

ஆஸ்திரேலியாவில் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள சட்ட விரோதக் குடியேற்றவாசிகளின் மனித உரிமைகள் புறக்கணிக்கப் படுவதாக அண்மைக்காலமாக வெளி வரும் செய்திகளையடுத்து, உண்மை நிலையை அறிவதற்காக சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் இரேனிகான் ஆஸ்திரேலி யாவுக்கு விஜயம் மேற்கொண்டுள் ளார். கன்பரா நகரில் உள்ள தேசிய ஊடக சபையில் அவர் உரையாற்று கையிலேயே மேற்படி கோரிக்கையை அவர் விடுத்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

மனித நேயத்துடனும் முற்போக்கு சிந்தையுடனும் அகதிகளை அணுக வதற்கு ஆஸ்திரேலியா தனது மக் களைப் பழக்கவேண்டும். புகலிடம் கோரிவரும் அகதிகள் மீது அவதூறு சுமத்துவதும் தடுப்பு முகாம்கள் குறித்த சர்ச்சைகளைத் தீர்ப்பதற் குத் தவறுவதும் ஆஸ்திரேலியாவின் நீதி குறித்த நன்மதிப்புக்கு களங் கம் ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

படகுகளில் வந்த சட்டவிரோத குடியேறிகளில் சிலர் தமக்குக் குடி யுரிமை தராவிட்டால், தமது குழந் தைகளை கடலில் வீசியெறியப்போவ தாக மிரட்டியதுடன், சில குழந்தை களை கடலில் எறிந்ததாகக் கூறி ஆஸ்திரேலிய அரசு அது தொடர் பான சில புகைப்படங்களையும் வெளியிட்டிருந்தது. ஆனால் அந்தப் படங்கள் படகு ஒன்று விபத்தினால் மூழ்கியபோது எடுத்தபடங்கள் என்ற உண்மை பின்னர் வெளிவந்தது. இத்தகைய செயல்கள் அகதிகள் மீது தவறான கருத்தை ஏற்படுத்து மென்றும் கான் அங்கு தெரிவித்தார். (ஒ)

# 'சார்க்' அமைச்சர்கள் மாநாடு பாகிஸ்தானில்!

இஸ்லாமாபாத்,மார்ச்11

'சார்க்' எனப்படும் தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பின் தகவல் மற் றும் தொலைத்தொடர்பு அமைச்சர் களின் மாநாடு பாகிஸ்தானியத் தலை நகர் இஸ்லாமாபாத்தில் ஆரம்பமானது.

பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் இந்த மாநாட்டைத் தொடக்கி வைத்தார்.

# முக்காடு அணிந்து வந்தோரால் லண்டனில் வைரம் கொள்ளை

லண்டன்,மார்ச்11

அரேபியப் பெண்களைப் போல் முழு உடலையும் மூடி முக்காடு அணிந்து வந்த இருவர் லண்டனில் உள்ள நகைக் கடையில் இரண்டு லட்சம்பெறுமதியான வைரங்களைத் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

ஆடைக்குள் மறைத்து வைத்தி ருந்த துப்பாக்கிகளைக் காட்டிப் பயமுறுத்தி கடைப் பணியாளர் களை ஓர் அறையில் அடைத்து விட்டே அவர்கள் இந்த வைரங் களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இவர்களில் ஒருவர் ஆண் என வும் -

'மற்றவர் பெண் எனவும் -

ஆண் 25 வயதான வெள்ளை இனத்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# சந்திரிகா & ரணில் & பிரபாகரன் } உடன்படிக்கைகள் கூறும் செய்தி என்ன?

**ரணில் விக்கிரமசிங்க பயங்கரவாதிகளுடன் உடன்பாட்டை மேற்கொண்டுவிட்டார். இதனால் நாட்டின் இறைமையும் ஒருமைப்பாடும் பாதிக்கப்படப்போகின்றது என்ற தொனியில் ஜனாதிபதி பேசிவருகிறார். ஆனால் ரணில் மேற்கொண்ட உடன்பாட்டில் உள்ள அடிப்படை விடயங்கள் அடங்கிய - ஏன் அதே சொற்களையே பயன்படுத்திய உடன்பாட்டில், அதே பிரபாகரனுடன் 1995இல் தான் மேற்கொண்டதை அவர் மறந்துவிட்டார்; மூடிமறைக்க முனைகிறார் என்ற வாதம் எழுந்துள்ளது.**

**இந்த இரு உடன்பாடுகள் குறித்தும்ஆராய்கிறது இக்கட்டுரை. நியூட்டன் செனிவிரத்ன என்பவரால் எழுதப்பட்டு 03-03-2002 திகதிய 'ராவய' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

கடந்த டிசெம்பர் 24 ஆம் திகதி முதல் விடுதலைப் புலிகள் ஒரு தரப்பாக ஒருமாத காலத்துக்கு யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டனர். அதற்கு ஒத்திசையும் விதத்தில் அரசாங்கமும் ஒருமாத காலத்துக்கு மோதல் தவிர்ப்பு அறிவிப்பைச்செய்தது. அதன் பின்னர் நிரந்தர யுத்தநிறுத்தத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்கடந்த மாதம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

நிரந்தர யுத்தநிறுத்தத்துக்கான புரிந்துணர்வு உடன்பாட்டில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடந்த மாதம் 20 ஆம் திகதி வன்னியில் கைச்சாத்திட்டார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் 22 ஆம் திகதி வவுனியா கச்சேரியில் அந்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டார். பின்னர் இந்த உடன்பாடு ஸ்ரீலங்காவுக்கான நோர்வேத் தூதுவர் மூலம் பரிமாறப்பட்டது.

இந்த யுத்தநிறுத்த உடன்பாட்டை எதிர்ப்பவர்கள் பல்வேறு கருத்துக்களையும் வெளியிட்டுள்ளனர். இவ்வாறான உடன்பாட்டை எட்டுவதற்கு பிரதமருக்கு அதிகாரம் இல்லை என ஒரு சிலர் வாதிக்கின்றனர். தங்களது கருத்துக்கு ஆதரவாக அர



சியல் அமைப்பின் 33 ஆவது சரத்தை அவர்கள் முன்வைக்கிறார்கள்.

ஜனாதிபதியின் அதிகாரங்களும், கடமைகளும்தொடர்பான அந்தச் சரத்தின் (இ) பிரிவில் "ஜனாதிபதிக்கு யுத்தத்தைப் பிரகடனப்படுத்தவும், சமாதானத்தைப் பிரகடனப்படுத்தவும் அதிகாரம் உண்டு" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சரத்தை அடிப்படையாக வைத்தே சில அரசியல் கட்சிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்த்து நீதிமன்றம் செல்வது எனத் தீர்மானித்துள்ளன.

1815 இல் நாட்டைத் தாரைவார்த்துக் கொடுத்த ஒப்பந்தத்தைவிட இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் துரோகத்தனம் நிறைந்தது என மற்றும் சில அரசியல் கட்சிகள் தெரிவிக்கின்றன.

சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக மீண்டும் மீண்டும் கூறும் ஜனாதிபதிகூட "விரும்பினால் ஒரு கடிதத்தின் மூலம் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை, என்னால் ரத்துச் செய்ய முடியும்" எனத் தெரிவித்தார் என்கின்றன செய்தி ஊடகங்கள்.

சமாதான உடன்பாடு தொடர்பாக, நோர்வே நாட்டுப் பிரதிநிதிகள் இந்நாட்டுக்கு வருகைதந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுடன் ஆலோசனைகளை மேற்கொண்ட ஒருவர் (ஜனாதிபதி), தற்போது சமாதான உடன்பாடு குறித்து மாறுபட்ட கருத்துக்களை வெளியிடும் செயலானது பெரும்பாலும் இந்தச் சமாதான உடன்பாட்டால் தனது 'புகழுக்குப் பங்கம் ஏற்படக்கூடும் (புகழ் வேறுஒருவரை அடையக்கூடும்) என்ற உணர்வின் பிரதிபலிப்பாகவே இருக்கக் கூடும்.

சில அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டை இதுவரை மேற்கொள்ளப்படாத - முதன்முதலாக கைச்சாத்திடப்பட்ட - உடன்பாடு எனக் கருதுகின்றனர். பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த தீவிர செயற்பாட்டாளர்கள் கூட விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையில் 1995 இல் இவ்வாறான புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டுப் பரிமாறப்பட்டதை அறிந்திருக்கவில்லை.

அவ்வாறு அவர்கள் அறிந்திராததற்குக் காரணங்கள் இல்லாமலும் இல்லை. 1994இன் பிற்பகுதியில் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதி பதவிக்கு வந்ததும் விடுதலைப் புலிகளுடன் கருத்துக்களைப் பரிமாறி, அவர்களுடன் நிரந்தர யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு வந்தபின்னர், அது குறித்து 1995ஜனவரி 5ஆம் திகதியே நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார்.

அந்த உடன்பாடு ஜனவரி7 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்தது. இருப்பினும் அந்தப் புரிந்துணர்வு உடன்பாடு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம்கூட நடைபெறவில்லை. இதனால்தான் அந்த ஆவணம் (புரிந்துணர்வு உடன்பாடு) பகிரங்கப்படுத்தப்படவில்லை. இவ்வாறான நிலையிலேயே அந்த ஆவணம் பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த சிலருக்கு மாத்திரமன்றி நாட்டில் உள்ள பலருக்கும் அந்தரங்கமான ஒன்றாக அமைந்துவிட்டது.

1995இல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டதாகத் தெரியவந்த புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைக்கு வந்த நாளுக்கு முதல்நாள் அந்த உடன்பாடு குறித்த தகவல்கள் வெளியாயின.

ஐ.தே. முன்னணித் தலைவர் விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்டுள்ள தற்போதைய புரிந்துணர்வு உடன்பாடு குறித்து இந்த நாட்டில் உள்ள உண்மையான இடதுசாரி அரசியல் சக்திகளும் அமைப்புகளும் நேர்மையுடனும் நன்னோக்கத்துடனும் கவனம் செலுத்துகின்றன. இதைவிட ஆளைத்துச் சமயத் தலைவர்களும் குறிப்பாக மகாசங்கத்தினர் யுத்தநிறுத்த உடன்பாட்டை புரிந்துணர்வு இன்றிச் சுற்றி நோக்குகின்றனர்.

இந்த உடன்பாடு இனப்பிரச்சினைக்கான தீர்வு அல்ல. யுத்தநிறுத்த காலத்தில் அரசியல் தீர்வு குறித்துப் பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும்.

பேச்சின் முடிவில் இரு தரப்பினாலும் எட்டப்படும் அதிகாரப் பரவலாக்கல் நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் மக்கள் கருத்துக்கணிப்பில் கிடைக்கும் ஆதரவுடனேயே நிறைவேற்றச் செயல் வடிவம் பெறும்.

யுத்தநிறுத்த உடன்பாடு ஸ்ரீலங்காவுக்குப் புதிய விடயமல்ல. இற்றைக்கு 7 ஆண்டுகளுக்கு முன்னரும் ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டது. நான்கு மாதங்கள் முடிவடையுமுன்னர் அந்த உடன்பாடு முறிவடைந்தது. இதுவும் ஸ்ரீலங்காவில் மாத்திரம் இடம்பெற்ற குறிப்பிடக்கூடிய சம்பவம் அல்ல.

இவ்வாறு மோதல்கள் (யுத்தங்கள்) இடம்பெறும் நாடுகளில் அரசாங்கங்களுக்கும் போராளிகளுக்கும் இடையில் உடன்பாடுகள் எட்டப்படுவதைப் போலவே உடன்பாடுகள் முறிவடைவதும் சகஜம். வட அயர்லாந்துப் பிரச்சினை தொடர்பாக 1998 இல் ஐ.ஆர்.ஏ. அமைப்பு நிரந்தர யுத்த நிறுத்தத்தை அறிவித்தது. இருப்பினும் அங்கொன்றும் இங்கொன்றுமாக மோதல்கள் இடம்பெற்றன.

தற்போது அரசியல் தீர்வின் அடிப்படையில் வட அயர்லாந்திற்கு தனிநாடு வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து அரசை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. இருப்பினும் இன்னும் அங்கு மோதல்கள் முற்றாக ஓயவில்லை.

கொலம்பியாவிலும் இதை ஒத்த நிலைமையே நிலவுகிறது. பேச்சுகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து கொலம்பியாவில் யுத்தநிறுத்தம்



முடிவடைந்தது.

பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி பல வருடங்கள் ஆகிவிட்டன. பலஸ்தீன நாட்டைப் பிரகடனப்படுத்துவதற்கு, நாளும் குறிக்கப்பட்டது. இருப்பினும் இன்றும் பலஸ்தீனம் ஒரு போர்க்களமாகவே உள்ளது. பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் ரமலா நகரில் இருந்து வெளியேறுவதற்குக்கூட இஸ்ரேல் தடை விதித்துள்ளது.

அரசாங்கங்களுடன் யுத்தநிறுத்தத்தை மேற்கொண்ட அமைப்புகள் பிளவுபட்டு, அவ்வாறு பிரிந்த பிரிவினர் மீண்டும் போராட்டங்களை ஆரம்பித்ததால் பல நாடுகளில் யுத்த நிறுத்த உடன்பாடுகள் முறிவடைந்துள்ளன.

பலஸ்தீன விடுதலை அமைப்பு (P.L.O.) சமாதான உடன்பாடு தொடர்பாக இஸ்ரேலுடன் நடவடிக்கைகளை எடுத்த வேளையில் பலஸ்தீன விடுதலை அமைப்பின் பங்காளியான ஹமாஸ் அமைப்பு தற்கொலை

**தமிழில்: கஜனி**

போராளிகளைப் பயன்படுத்தி இஸ்ரேல் நாட்டுக்குள் குண்டுவெடிப்புக்களை நடத்தியது.

வட அயர்லாந்தில் ஐ.ஆர்.ஏ. அமைப்பின் அரசியல் பிரிவு புதிய அயர்லாந்து அரசுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தபோதும் ஐ.ஆர்.ஏ. அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற பிரிவினர், மீண்டும் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதன் அர்த்தம் பிரபாகரனின் யுத்தநிறுத்த உடன்பாட்டை ஏற்காது அந்த அமைப்பிலிருந்து ஒரு பிரிவினர் பிரிந்து சென்று எதிர்காலத்தில் யுத்தநிறுத்தத்தைக் கைவிட்டு மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பார்கள் என்பதல்ல. இவ்வாறான யுத்தநிறுத்தங்களை இந்தவிதமாகவே உற்றுநோக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நிரந்தர யுத்தநிறுத்தத்தின் தேவை குறித்து முதலில் கவனம் செலுத்தியது பொ.ஐ.முன்னணி அரசே ஆகும்.

07-01-1995இல் நடைமுறைக்கு வந்த யுத்தநிறுத்தம் ஏப்ரல் மாதத்தில் உடன்பாடு முறிந்ததையடுத்து செயலிழந்தது.

ஜனாதிபதியும் பிரபாகரனும் கைச்சாத்திட்ட அந்த உடன்பாட்டில் 7 ஆவது சரத்தின்படி மோதல் தவிர்ப்பானது, சம்பந்தப்பட்ட இருதரப்பாரில் ஒரு தரப்பினர் தாங்கள் உடன்பாட்டில் இருந்து விலகிக்கொளவதாக அறிவிக்கும்வரை நடைமுறையில் இருக்கும் உடன்பாட்டில் இருந்து விலகுவதாயின் ஆகக்குறைந்தது 72 மணித்தியால (மூன்று நாள்கள்) முன்னறிவிப்பை மறுதரப்பாருக்கு விடுக்க வேண்டும். இந்தச் சரத்தின் அடிப்படையிலேயே விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்த உடன்பாட்டில் இருந்து விலகினர்.

தற்போதைய அரசு கைச்சாத்திட்டுள்ள யுத்தநிறுத்த உடன்பாட்டின் 4:3ஆவது சரத்தின்படி இருதரப்பாரின் இணக்கத்துடன் இந்த உடன்பாட்டில் திருத்தங்களையோ அல்லது மாற்றங்களையோ மேற்கொள்ளலாம். அந்த மாற்றம் அல்லது திருத்தம் தொடர்பாக நோர்வே அரசுக்கு அறிவிக்கவேண்டும்.

4:4ஆவது சரத்தின்படி யாராவது ஒரு தரப்பார் தாம் உடன்பாட்டில் இருந்து விலகுவதாக நோர்வே அரசுக்கு அறிவிக்கும் வரை உடன்பாடு செயல் வடிவில் இருக்கும். மேலும் உடன்பாட்டில் இருந்து விலக விரும்பும் தரப்பு அதுகுறித்து 14 நாள்களுக்கு முன்னர் அறிவிக்கவேண்டும்.

1995 யுத்தநிறுத்த உடன்பாடு 7 சரத்துக்களைக் கொண்ட ஒரு சிறு ஆவணமே.

தற்போதைய உடன்பாடானது அடிப்படையான 4 சரத்துக்களையும் பல்வேறு உபசரத்துக்களையும் கொண்ட ஒரு நீண்ட ஆவணமாகும். 1995 உடன்பாட்டைவிட இதில் விடயங்கள் விவரமாக உள்ளடக்கப்பட்டதால் இது நீண்ட ஆவணமாக இருப்பினும் 1995 உடன்பாட்டை ஒத்த விதத்திலும், பல இடங்களில் அந்த உடன்பாட்டில் பயன்படுத்திய சொற்களைப் பெரும்பாலும் கொண்டதாகவும் தற்போதைய உடன்பாடு தயாரிக்கப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டு உடன்பாட்டின் முதலாவது சரத்தின்படி அந்த உடன்பாடு நடைமுறையில் இருக்கும் கால எல்லைக்குள் எந்தத் தரப்பினரும் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது. அவ்வாறு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் உடன்பாட்டை மீறிய செயலாகக் கருதப்படும்.

தாக்குதல் நடவடிக்கை என்றால் என்பது குறித்து 4ஆவது சரத்தில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அரசியல் குழுவையோ அல்லது கட்சியையோ அல்லது தனிநபர் ஒருவரையோ இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் தாக்குதல் நடவடிக்கைகள், குண்டுத் தாக்குதல்கள், ஆள் கடத்தல்கள், படுகொலைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஆகியன தாக்குதல் நடவடிக்கைகள் எனக் கருதப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

தற்போதைய உடன்பாட்டின் 1:2 சரத்தின்படி எந்தவொரு தரப்பும் பாதிப்பை ஏற்படுத்தும் ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது. 1:2(அ) சரத்தின்படி ஆயுதத்தின்மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுடுதல், ஆயுதம் தரித்து சுற்றி வளைத்தல், மறைந்திருந்து தாக்குதல், முக்கியஸ்தர்களைப் படுகொலை செய்தல், ஆள்களைக் கடத்தல், ராணுவத்தின் அல்லது பொதுமக்களின் உடைமைகளுக்குச் சேதம் விளைவித்தல், தற்கொலைத் தாக்குதல், ஆழமாக ஊடுருவித் தாக்குதல்களை மேற்கொள்ளுதல், வானிலிருந்து மேற்கொள்ளப்படும் குண்டுத் தாக்குதல்கள், கடற்கலங்கள் மீதான தாக்குதல்கள், பாதிப்பை ஏற்படுத்தும் தாக்குதல்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

1995 உடன்பாட்டின் 2ஆவது சரத்தில், 'விடுதலைப் புலிகளுக்கு எதிராக எந்தவிதமான தாக்குதல்களையோ அல்லது குறிப்பிட்ட பிரதேசங்களில் சட்ட பூர்வமானதும் நிரந்தரமானதுமான மீன்பிடித் தொழிலுக்கு இடையூறான விதத்தில் தாக்குதல்களை மேற்கொள்ளாது. - வெளியாரின் ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் சட்டபூர்வமான நடவடிக்கைகளில் கடற்படையும் விமானப்படையும் தொடர்ந்து ஈடுபடும் எனக் கூறப்பட்டுள்ளது.

தற்போதைய உடன்பாட்டில் இந்த விடயங்கள் 1:3ஆவது சரத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளன.

- விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் சேதங்களை விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாவிட்டாலும் ஸ்ரீலங்காவின் படைகளுக்கு நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்காக சட்டபூர்வமாக மேற்கொள்ளக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் உரிமை உண்டு.

அரச படைகளும் விடுதலைப் புலிப் போராளிகளும் 1995 உடன்பாட்டின்படியும் தற்போதைய உடன்பாட்டின்படியும் சகல பிரதேசங்களிலும் தங்கியிருக்க முடியும். இரு தரப்பினருக்கும் இடையில் குறைந்தது 600 மீற்றர் இடைவெளி இருக்க வேண்டும்.

1995 மற்றும் 2002 யுத்தநிறுத்த உடன்பாடுகளின்படி ஒவ்வொரு தரப்பினரும் இந்த 600 மீற்றர் இடைவெளியில் தம்பக்கத்திலிருந்து 100 மீற்றர் வரை சென்றுவர அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் இந்த இடைவெளி 400 மீற்றருக்குக் குறைவாக உள்ள இடங்களில் தங்கள் நிலைகளில் இருந்து முன்னோக்கிச் சென்று வர அனுமதியில்லை.

1995 உடன்பாட்டின்படி யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு கனடா, நெதர்லாந்து, நோர்வே மற்றும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் பிரதிநிதிகள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது. ஆனால் தற்போதைய உடன்பாட்டிற்கு அமைய



யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் நோர்வே, பின்லாந்து, டென்மார்க் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இடம்பெறுவர்.

யுத்தநிறுத்தம் மீறப்படுவதைக் கண்டறிய 1995 உடன்பாட்டின்படி யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் 7 சோதனை நிலையங்கள் அறிவிக்கப்பட்டன. ஆனால் தற்போதைய உடன்பாட்டில் 17 சோதனை நிலையங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மீன்பிடி நடவடிக்கைகளுக்கு கடற்படையினர் இடையூறாக இருக்கலாகாது என 1995 உடன்பாட்டில் கூறப்பட்டிருந்தது. ஆனால் 2002 உடன்பாட்டின்படி மீன்பிடிக்கும் கடல் எல்லைகள் உடன்பாடு நடைமுறைக்கு வரும் நாளில் இருந்து படிப்படியாகத் தளர்த்தப்பட்டு 90 ஆவது நாளின் பின்னர் கடற்கரைப் பிரதேசங்களில் படை முகாம்கள் அமைந்துள்ள இடத்தின், கரையின் இருபுறமும் ஒரு மைல் தூரத்திற்கும் கடலில் இரு கடல் மைல் தூரத்திற்குட்பட்ட பிரதேசத்திலும் துறைமுகங்களுக்குள் உள்நுழையும் அல்லது துறைமுகங்களில் இருந்து வெளியேறும் கடல் எல்லைகள், நீர்நிலைகள் அமைந்துள்ள பகுதிகள் ஆகியன தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பகலிலும் இரவிலும் மீன்பிடிப்பதற்கு இருக்கும் தடைகள் முற்றாக நீக்கப்படும்.

1995 உடன்பாட்டில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள்

(09ஆம் பக்கம் பார்க்க)

உதயன்

## ஆசிரிய நியமனங்களில். நியாயமான பங்கீடு தேவை

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நாலாயிரம் ஆசிரியர்களுக்கு பற்றாக் குறை நிலவுகிறது. பொதுவாகக் கணித்தால் முழு மாகாணத்தின் ஆசிரிய ஆளணித் தேவையில் இது 16வீதம். ஆனால், இந்த விகிதாசாரம் வாகரை, கொக்கட்டிச்சோலை போன்ற - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் - 45வீதம் வரை உயர்ந்து காணப்படுகின்றது.

இந்தத் திடுக்கிடும் தகவலை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கே.சண்முகலிங்கம் வெளியிட்டிருக்கின்றார்.

பற்றாக்குறையாகவுள்ள நாலாயிரம் ஆசிரியர்களில் கணிசமான பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப்பிரதேசத்துக்கு உரியது. அங்கு மட்டும் ஆயிரத்துஎண்ணூறு ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன.

"வசதி கூடிய மக்களுக்கும் வசதி குறைந்த மக்களுக்கும் இடையேயான போராட்டமே வளப் பங்கீட்டுப் போராட்டமாகும். வளங்கள் பாரபட்சமாக பகிரப்படும்போது அதில் அரசியல் தலையீடு ஏற்படுகின்றது" என்றும் மாகாணக் கல்விச் செயலாளர் கூறியிருக்கின்றார்.

வளப்பங்கீட்டுக்கு இனவாதம் காரணமாகும்போது அரசியல் தலையீடு இன அடிப்படையில் அமைவதாக இருக்கும் என்பது குறிப்பிட்டுத்தான் காட்ட வேண்டும் என்பதல்ல.

எண்பதுகளின் பிற்பகுதியில் இருந்தே நாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசம் - அதுவும் கல்வித் துறையைப் பொறுத்தவரை அதிக பாதிப்புக்குள்ளான பிரதேசம் - வடக்கு - கிழக்கு மாகாணந்தான்.

அதிலும் கூட, அதிகம் பாதிக்கப்பட்டது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கு - கிழக்குப் பகுதிகள்தான்.

ஆனால், இத்துறைக்கான வளப் பங்கீடு விடயத்தில் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு திட்டமிடப்பட்டு ஒதுக்கப்பட்டது என்பதும், அதையும் மிஞ்சி ஒதுக்கீடு செய்யப்பட்ட கொஞ்ச, நஞ்ச வளத்தில் கணிசமான பகுதி தன்னும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த கல்விச் சமூகத்துக்கு வழங்கப்படவில்லை என்பதும் கடந்த காலச் சரித்திரங்கள்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசத்தில் பெரும்பாலான பாடசாலைக் கட்டடங்கள் போரினால் தகர்க்கப்பட்டுவிட்டன. பாடசாலையில் மாணவர்கள் அமர்ந்திருந்து கல்வி கற்கத் தளபாடங்களே இல்லை. மர நிழலில், மண் நிலத்தில் குந்தியிருந்து படிக்கும் அவலநிலையில் மாணவர்கள்.

ஆனால் வடக்கு - கிழக்கு கல்வித் துறைக்கு வந்த நிதி சிலபிரதேசப் பாடசாலைகளில் மட்டும் கட்டடத்துக்கு மேல் கட்டடமாகவும், 'சொகுசு' வசதிகளாகவும் மாறிக்கொண்டிருந்தது.

இத்தனைக்கும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அலுவலகத்திலும், மாகாணக் கல்வி அமைச்சிலும் இது வரை காலம் உயர் பதவிகளை அலங்கரித்தவர்கள், கஷ்டப்பட்ட - வசதி குறைந்த - போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நீண்டகாலம் பணியாற்றி, பதவி உயர்வு பெற்று, மாகாண அலுவலகத்துக்கும் சென்றவர்கள்தான்.

தாங்கள் முன்னர் பணிபுரிந்த இடங்களில் கல்வித் துறையின் அவல நிலை குறித்தும் வளப் பங்கீட்டில் அவை ஒதுக்கப்பட்டமை குறித்தும் துல்லியமாக - நேரடியாக - அறிந்தவர்கள் அவர்கள்.

அப்படியிருந்தும் கிடைத்த உயர் பதவியைப் பற்றிப்பிடித்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, வளப்பங்கீட்டில் தொடர்ந்து அநீதி இழைக்கப்படுவதற்கு அவர்களும் துணைபோனார்கள்.

வவுனியா, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பொதுவாக ஆசிரியப் பற்றாக்குறையே இல்லை. இருந்தாலும் மிகக் குறைவு. அதேபோன்று இப்பிரதேசத்தில் சிங்கள மொழி மூல ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை இல்லை.

ஆனால், வடக்கு - கிழக்கில் புதிய ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும்போது மாவட்ட 'கோட்டா'வும் இன விகிதாசாரக் 'கோட்டா'வும் தொடர்ந்து பின்பற்றப்படுகின்றன.

அதாவது மேல் மிச்சமாக இருக்கும் பகுதிகளுக்குப் புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றார்கள் - பற்றாக் குறையுள்ள பிரதேசங்களின் தேவையை முழுவதுமாக நிவர்த்தி செய்யாமலேயே.

இங்குதான் வளப் பங்கீட்டில் "கோமாளித்தனம்" புகுந்துகொள்கின்றது.

• இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான நல்லெண்ணச் சூழ்நிலையைத் தோற்றுவிக்க, இப்போது முயற்சி எடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்திலாவது வளப் பங்கீட்டில் அநீதி இழைக்கப்படாமல் - நீதி செய்யப்படுவதை - உறுதிப்படுத்த, அரசியல் தலைமைத்துவங்கள், உயர் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஐந்தாவது நடமாடும் சேவை 21இல்

யாழ்ப்பாணம்,மார்ச்11

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஐந்தாவது நடமாடும் சேவை எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை நீராவியடிப் பகுதியில் நடைபெறும் என பிரதேச செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாவலர் மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் இந்த நடமாடும் சேவை நடைபெறும்.

ஐயனார்கோயிலடி, வண்ணார் பண்ணை, நீராவியடி, கந்தர்மடம், ஆனைப்பந்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ளோர் இந்த நடமாடும் சேவையில் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியும் -

இது தொடர்பான விவரங்களை எழுத்து மூலமாக கிராம அலுவலரிடமோ அல்லது பிரதேச செயலகத்திலோ ஒப்படைப்பின் அதற்கான தீர்வு அன்றைய நடமாடும் சேவையில் பெறமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். (க-180)

## முற்றவெளிப் பகுதியில் அமைந்துள்ள
# எரிபொருள் நிரப்புநிலைய தாங்கி புனரமைக்கப்படுகிறது

அரியாலை,மார்ச்11

முற்றவெளியில் அமைந்திருக்கும் யாழ். ப.நோ.கூ. சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் உள்ள பெற்றோல் நிரப்பும் நிலத்தடித் தாங்கியை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிலையத்தில் பெற்றோல் விநியோக வசதியை ஏற்படுத்தும் முகமாகவே இந்தப் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதே சமயம் -

மேற்படி நிலையத்தில் சேதமடைந்து தரைமட்டமாகிக் கிடக்கும் கட்டடத்தை உடனடியாகப் புனரமைத்துத் தருமாறு சங்கத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-17)

## நாட்டு நடப்பு

### மூவகை ஈச்சப்பி

'ஈ' யொன்று தேநீரில் வீழ்ந்தால்
எடுத்ததை கறண்டியால் வீசி விட்டு
ஒரு கறண்டி தேநீர் போச்சேயென்று
ஒருகணம் மனது நொந்துவிட்டு
எஞ்சிய தேநீர் தன்னை இன்புற உண்பான் - ஈச்சப்பி

ஈயதை மெதுவாய் தூக்கிப் பார்த்து
எடுத்ததை தூர வீசிவிட்டு
ஒரு சொட்டு தேநீர் போச்சேயென்று
உளம் நொந்து குடிப்பான் - பரம ஈச்சப்பி

மூன்றாம் வகை ஈச்சப்பி என்பான்
முதல் அந்த ஈயைத் தூக்கிப் பார்த்து
செட்டையில் கிடக்கும் தேநீரை உறிஞ்சி விட்டு
செத்த ஈயை பொக்கற்றில் போட்டு விட்டு
அப்புறம் அந்தத் தேநீரை அருந்துவான் - மகா ஈச்சப்பி.

" 'ஈ' சப்பி குடித்த தாலோ
ஈச்சாப்பியென பேரே வைத்தர் "

- *விகடகவி.*

## குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலையில் சரிவு!

யாழ்ப்பாணம்,மார்ச்11

குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் வாழைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டோர் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

திருநெல்வேலிச் சந்தையில் கதலி வாழைப்பழம் ஒரு கிலோ இரண்டு ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரையிலும் -

கப்பல், இதரை முதலான பழங்கள் ஐந்து ரூபாய் முதல் பத்து ரூபாய் வரையிலும் -

விலை கொடுத்தே வியாபாரிகள் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்கின்றனர்.

இதனால் இம்முறை வாழைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட பலரும் பெரும் நஷ்டமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. (ம-ரி)

# நாலாயிரம் ஆசிரியர்களுக்கு வடக்கு - கிழக்கில் பற்றாக்குறை

## சமாளிப்பது எவ்வாறு என மாகாண கல்விச் செயலாளர் கேள்வி

மட்டக்களப்பு,மார்ச்11

"வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நாலாயிரம் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. பொதுவாகக் கணித்தால் இது 16 வீதப் பற்றாக் குறையாகும். ஆனால் இவ்விகிதாசாரம் வாகரை, கொக்கட்டிச்சோலை போன்ற பகுதிகளில் 45வீதம் வரை உயர்ந்து காணப்படுகின்றது.

- இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கே.சண்முகலிங்கம், கொக்கட்டிச்சேலையில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்டங்களின் பொறுப்பாளர் கரிகாலன் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் கல்விச் செயலாளர் சண்முகலிங்கம் மேலும் கூறியதாவது:-

"வடக்கு - கிழக்கில் 1971 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 28 வீதமான பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறை நிலவுகிறது.

வசதிகூடிய மக்களுக்கும் வசதி குறைந்த மக்களுக்கும் இடையேயான போராட்டமே வளப் பங்கீட்டுப் போராட்டமாகும். இதில் பாரபட்சங்கள் ஏற்படுவதுண்டு. இயன்றவரை வளங்களைப் பாரபட்சமில்லாமல் பகிர அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

வடக்கு - கிழக்கு ஆசிரியர்களுக்கு புதிய திட்டமொன்றை அறிமுகப் படுத்தி இருக்கிறோம். விரும்பிய ஆசிரியர்கள் பாட நூல்களை எழுதலாம். தரமான பாடநூல்களைத் தெரிவுசெய்து எமது மாகாண இலக்கிய விழாவில் பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட தொகை பாட நூல்களையும் எமது அமைச்சு கொள்வனவு செய்யும். ஆசிரியர்களை எழுதுவதில் ஊக்குவிக்கும் ஒரு திட்டமாக இதனைக் கருதுகின்றோம்.

வளப் பங்கீடுகளுக்கிடையிலான போராட்டமே அரசியல் எனலாம். வளங்கள் பாரபட்சமாகப் பகிரப்படும்போது அரசியல் தலையிடுகிறது. 1984இல் தோட்டப் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்ற பின்பு கல்வித் துறையில் சிறுமாற்றம் ஏற்பட்டது. 'சீடா' நிறுவனம் உதவியளித்த பிற்பாடு மலையகக் கல்வியில் பெரும் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

வடக்கு - கிழக்கில் எப்போது பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதோ அன்றே சமூகம் பாடசாலையிலிருந்து ஒதுங்கிக் கொண்டது. இது நல்லதல்ல. பாடசாலையும் சமூகமும் ஒன்றுடனொன்று தொடர்பு கொண்டவை. பாடசாலைக் கல்வியில் எமது சமூகம் நிச்சயம் கவனமெடுக்கவேண்டும்" - என்றார்.

மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.முருகுப்பிள்ளை உட்பட பல கல்வி அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம)

# வடக்குக்கான வரவு - செலவுத் திட்டத்தை இனி புனர்வாழ்வு அமைச்சே கையாளும்

## புதிய நடைமுறை அறிமுகம்

கொழும்பு,மார்ச்11

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு, அவற்றின் மேற்பார்வை போன்றன புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பிராந்திய அபிவிருத்தி அமைச்சுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பணிகள் இதுவரை காலமும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இதற்கமைய, வடபிராந்தியத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தினை கையாளும் பொறுப்பு புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் 35 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே, 2002இல் இத்திட்டத்தின் கீழ் வடக்கில் மேற்கொள்ள வேண்டிய செயற்றிட்ட நடைமுறை யோசனைகளை தமக்கு அனுப்பி வைக்குமாறு புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன வடக்கில் உள்ள சகல நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது யோசனைகளை தத்தமது பிரதேச செயலர்கள் மூலம் மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கும்படி அமைச்சர் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமான சுற்றறிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாவட்ட செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டம் சம்பந்தமான சகல விடயங்களும் அமைச்சின் மேலதிக செயலாளர் த. குமாரதாசனினால் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன. (ம)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்11

யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா பயிற்சிநெறியினை பூர்த்திசெய்த முதலாம், இரண்டாம் அணி மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை முற்பகல் 11 மணிக்கு யாழ்.ஆரியகுளம் சந்தியில் உள்ள உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-7)

# மண்ணெண்ணெய் விற்பனை குடாநாட்டில் திடீர் வீழ்ச்சி

அரியாலை,மார்ச்11

யாழ்குடாநாட்டில் தற்போது மண்ணெண்ணெய் விற்பனை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளதாக எரிபொருள் விற்பனை நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த பெப்ரவரி மாதம் வரை மண்எண்ணெய் வியாபாரம் பெருமளவில் களைகட்டியது. தற்போது அது திடீரென்று வீழ்ச்சியடைந்துள்ளது.

தட்டுப்பாடான காலத்தில் மக்கள் அதிகளவில் மண்எண்ணெயை வாங்கி சேமித்து வைத்தனாலேயே தற்போது அதன் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-17)

### நாளை

மாசி 28
செவ்வாய்க்கிழமை
(12.03.2002)
திதி : சதுர்த்தசி
காலை 6.04 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
முற்பகல் 10.43 வரை.
மகா சிவராத்திரி விரதநாள்
சுபநேரம் : 10.53 - 12.23
ராகுகாலம் : 3.23 - 4.53
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சேற்றில் மாட்டிக் கொண்டவன் இன்னொருவனையும் அதில் இழுத்துவிடவே விரும்புகிறான்.

## யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### பொன்னடி போற்றி! போற்றி!

திருவிழாக் கோலம் பூண்ட
வண்ணை வைத்தீஸ் வரனே
அரியொடு அயனும் தேடி
அடிமுடி காணாப் பாதா
விரிசடை தன்னில் கொன்றை
நதிபிறை அணிந்த சீலா
பரிவுட னிடர்கள் தீர்ப்பாய்
பொன்னடி போற்றி! போற்றி!

*தமிழிசைக் கவிஞர் ஏ.கே.ஏரம்பமூர்த்தி*

## உழவு இயந்திரம் பெட்டியுடன் வாடகைக்கு விடுவதற்கான கூறுவிலை கோரல்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குப்பை அகற்றும் பணியினை மேற்கொள்வதற்காக உழவு இயந்திரத்தினை நாளொன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள் சேவையிலீடுபடுத்துவதற்கான கூறுவிலைகள் இத்தால் கோரப்படுகின்றது.

கூறுவிலைப் படிவங்கள் பங்களா வீதி, மீசாலையிலுள்ள சபை அலுவலகத்தில் பெற்று 18.03.2002ஆம் திகதிக்கு முன்பதாகச் **'செயலாளர், நகரசபை, சாவகச்சேரி'** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
08.03.2002

*தலைவர்*
நகரசபை, சாவகச்சேரி.

(C/21017)

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

வலி.தெற்கு,மார்ச்11

கொழும்பு மத்திய லயன்ஸ் கழகத்தினர் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்துடன் இணைந்து திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்துக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

கணனி, அச்சு இயந்திரம் என்பனவே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. லயன்ஸ் கழக உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(ம-7-152)

## பொதுக்கூட்டம்

கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-4)

## போற்றி வாழ்த்துகின்றோம்



இலங்கை அரசு, கலாபூஷணம் **சீ.நடராஜா** ஆசிரியர், **எஸ்.என்.ஆர்.** அவர்களை ஒரு சமாதான நீதிவானாக 2001இல் நியமித்தது. அதற்கேற்ப, அவர் யாழ். மாவட்ட நீதிமன்றில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியைப் பெற்றுள்ளார். ஏற்கனவே இலங்கை அரசு இவரின் கலைத்திறனைப் பாராட்டி கலாபூஷண விருதும், பணப் பரிசும், சான்றிதழும் வழங்கியமை பாராட்டுதலுக்குரியது. **"எப்படி வரைவது?"** என்ற நூலை ஆக்கி வெளியிட்டு பெரும் புகழ் பெற்றுள்ளார். இலங்கைப் பொலீஸ் திணைக்கள அதிபர் இவரின் கலைத்திறனைப் பாராட்டி பல பரிசுகள் வழங்கியிருக்கிறார். இவர் இலங்கையிலும், சென்னையிலும் பயின்று இரு கலை ஆசிரியர் பத்திரங்களைப் பெற்றவர். அகில இலங்கைச் சித்திர ஆசிரிய சங்கத்திலும், வடமாகாண சித்திர ஆசிரியர் சங்கத்திலும் காரிய தரிசி பதவி வகித்தவர். இலங்கையிலும், வெளிநாடுகளிலும் பல சித்திரப் போட்டிகளில் பரிசுகள் பெற்றிருக்கிறார்.

கொழும்பு - பம்பலப்பிட்டி சென். பீற்றர்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, பருத்தித்துறை காட்லிக் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, நடேஸ்வராக் கல்லூரி, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய உயர் கல்லூரிகளில் ஆசிரியர் பணியாற்றியவர்.

இம்மகானை, எம் மண்ணின் பெருமையை உயர்த்திய ஆசிரிய அறிஞரை, கலாபூஷணக் கலைஞரை, கலை வித்தகரை, எழுத்தாளரை, சமாதானம், சமூகத் தொண்டு, கடமை, கண்ணியம், நீதி, நியாயம், அன்பு, அறம் நிறைந்த எம்மைந்தனை, ஸ்ரீ முருகக் கடவுளின் அன்புப் புதல்வனை வாழ்த்திப் போற்றுவோம்; பெருமைப்படுவோம் இறைவனின் ஆசியுடன்.

*வாழ்த்தும் பிரமுகர்கள்:*

**டாக்டர் த.இராசையா பொன்.பூலோகசிங்கம்** (உயர் நீதிமன்ற சட்டத்தரணி),
**திரு.ஆ.சி.கணேசவேல்** (சமாதான நீதிவான்),
**திரு.இரா.லோகேந்திரராஜா** (சமாதான நீதிவான்),
கலாபூஷணம் **ஏ.ரி.பொன்னுத்துரை** (பி.ஏ. ஆசிரியர்),
**திரு.க.கதிரேசு** (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்),
**திருமதி த.சிவயோகாம்பிகை, திரு.ப.இராஜகோபாலன்** (நிதி உதவியாளர்),
**திரு.து.நவசிவாயம்** (ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்),
*மானிப்பாய்.* **திரு.ஐ.ஞானேந்திரா** (ப.அ.ச. உத்தியோகத்தர்) (1492)

பக்திக்கும் மரியாதைக்கும் **உரியது** கோயிலா? வைத்தியசாலையா? ஏன்? இரண்டும்தான்!!

மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை

## கோலாகலமான அதிரடித் திறப்புவிழா

காலநேரம்: 12.03.2002 செவ்வாய் காலை 10 மணி

### பத்தாவது இலவச கண்ணாடி வழங்கும் திருவிழா

**UNHCR உதவியில் 15 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட**
**சிகிச்சை மண்டபம் (முதல் கட்டம்)**
**CLINIC COMPLEX (Stage I)**
**அங்குரார்ப்பணம் செய்பவர்**
*அகதிகளின் அன்பரசி*
**திருமதி மோஹன் மொறிஸ்**
**Ms.MORGAN MORRIS** - UNHCR - BOSS - JAFFNA

விழாவின் தலைமகன்
தலைவணங்காத் தம்பி
**திரு.M.K.சிவாஜிலிங்கம்**
கௌரவ பா. உறுப்பினர்.

நிகழ்ச்சிகளின் பாலம்
**Dr.க.மயிலேறும்பெருமாள்**
தலைவர், வை. அ. சபை

**விழாவினை ஆசீர்வதித்து முதல் கண்ணாடிகளை வழங்கும் முத்தான முத்துக்கள்**

ஆன்மீகச் செம்மல்
**சுவாமி சித்ருபானந்தா**
சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.

அரசநிர்வாகக் கடல்
**திரு.க.சண்முகநாதன்**
அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.

**விழாவினைச் சிறப்பித்து வாழ்த்தும் காலக் கருவூலங்கள்**

நெறிதவறா நெஞ்சுரத்தோன்
**திரு.அ.பிரேமசங்கர்**
மாவட்ட நீதிபதி, பரு. சாவ.

கருத்துக்களஞ்சியம்
**திரு.மு.திருநாவுக்கரசு** (விகடகவி)
இளைப்பாறிய நீதிபதி, யாழ்ப்பாணம்.

**அன்புச் சொற்போர் ஆற்றும் பகுத்தறிவாளர்கள்**

சொற்சிலம்பர்
**திரு.ஆ.சிவசுவாமி**
பிரதேச செயலர், பருத்தித்துறை.

திட்டத்தின் செம்மல்
**திரு.நா.மகேந்திரன்**
திட்டமிடற் பணிப்பாளர், பரு.

சுந்தர எந்திரி
**திரு.சே.கைலாசபதி**
இளைப்பாறிய இ. போ. ச. எந்திரி

வர்த்தக இரத்தினம்
**திரு.செ.இரத்தினகுமார்**
தலைவர், வர்த்தக சங்கம், உடுப்பிட்டி.

வைத்தியசாலையில் 24.02.2002 உடுப்பிட்டி வர்த்தகர் சங்க அனுசரணையுடன் நடத்திய கண்பரிசோதனையின்போது தெரிவான மக்களில் தகுதிபெற்ற அனைவருக்கும் **வைத்தியசாலை அபிவிருத்தி நிதியிலிருந்து** இலவசமாகக் கண்ணாடி வழங்கப்படும்.

மாவட்ட வைத்திய அதிகாரி, உத்தியோகத்தர்கள்,
வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர், உடுப்பிட்டி வர்த்தக சமூகம்.

கண்ணாடிகளை உரிய நேரத்திற்கு என்றும் தந்துதவும் கண்ணாடி மன்னன்
**S.M.பெர்னாண்டோ** நிறுவனத்தாருக்கு என்றும் எம் நன்றிகள்.

(1456)


## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினைப் புனரமைப்புச் செய்வதற்கான விஷேட பொதுக் கூட்டம் தும்பளையிலுள்ள சமாசப் பணிமனையில் எதிர்வரும் 2002.03.13ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு சமாசத் தலைவர் தலைமையில் நடைபெறவிருப்பதால் சமாசத்திற்கான சங்கப் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**க.இரவீந்திரன்**
*சமாசத் தலைவர்.*

(சி-20988)

## 60ஆவது நாள் நினைவஞ்சலி



பிறப்பு 04 - 07 - 1960

இறப்பு 10 - 01 - 2002

### அமரர் சின்னராசா பாஸ்கரன்

(பபா)

பிரான்ஸில் மரணமான அன்னாரது 60ஆவது நாள் நினைவஞ்சலி நிகழ்வு இன்று (11.03.2002) திங்கட்கிழமை 'லிங்கவாசா', வல்வெட்டியில் நடைபெறுகின்றது. அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*'லிங்கவாசா'*
*வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.* (1504)

பெற்றோர், சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உதயம் 11 - 06 - 1973

அஸ்தமனம் 11 - 03 - 1998

திருமதி

### யோ. வலன்ரைன் றொமின் அன்ரனிற்றா

**இறைவனின் மலர்ப்பாதங்களில் மலராகி இருக்கும்**
**எங்கள் முதற்செல்வத்தைப் பாசத்துடன்**
**நினைவு கூருகிறோம்.**

*36/1, ஆசீர்வாதப்பர் வீதி,*
*கச்சேரி நல்லூர் றோட்,*
*யாழ்ப்பாணம்.*

அன்புடன்:
குடும்பத்தினர்.
(1445)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பூ உலகில் 27 - 12 - 1939

விண்ணுலகில் 09 - 02 - 2002

அமரர்

### சண்முகம்பிள்ளை கதிர்காமன்

*(கதிர்காமன் இரும்பு தொழிற்சாலை உரிமையாளர்)*

**எமது குடும்பத்தின் திருவிளக்கே அப்பா!**
**ஒவென்று நாம் கதறியழ ஓடி மறைந்தீரே**
**எம் கண்முன்னே!**
**என்றும் உங்கள் நினைவுடன் வாழ்ந்து**
**ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.**

இன்று (11.03.2002) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*98, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.* (1470)

பிரிவால் துயருறும்:
மனைவி, K.சுரேஸ்குமார் (மகன்)
(2002 A/L மாணவன், வர்த்தகம்)

ஆசிரியர் தொழில்வாண்மை நிலையத்தால்

# சிறந்த கல்வியியல் கல்லூரிகளாக யாழ்ப்பாணம், றுகுணு என்பன தெரிவு

யாழ்ப்பாணம்,மார்ச்11

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் இயங்கும் ஆசிரியத் தொழில்வாண்மை நிலையத்தால் யாழ்ப்பாணத் தேசிய கல்வியியல் கல்லூரியும், றுகுணு தேசிய கல்வியியல் கல்லூரியும் இலங்கையில் சிறந்த தேசிய கல்வியியல் கல்லூரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

புதிய கல்வித் திட்டத்திற்கு அமைவாக இலங்கையில் உள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகளில் இவை இரண்டும் சிறந்த செயற்பாடுகளையும், கட்டுப்பாடுகளையும் பேணி வருவதுடன் கற்பித்தல் பயிற்சிகளும் சிறப்பாக அளிக்கப்படுவதாலேயே இவற்றுக்கு இந்தக் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியானது சொந்தமான கட்டட வசதி இல்லாத நிலையிலும் கூட கற்பித்தல் செயற்பாடுகளைச் சிறப்பாக மேற்கொள்வதுடன் மாணவர்களை ஒழுங்கு, கட்டுப்பாட்டுடன் எதிர்காலத்திற்குத் தேவையான சிறந்த ஆசிரியர்களாக உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருவதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

கல்லூரி, இந்தக் கௌரவத்தைப் பெறுவதற்கு விரிவுரையாளர்களதும், மாணவர்களதும் பூரண ஒத்துழைப்பே காரணம் என்று பீடாதிபதி தி.கமலநாதன் தெரிவித்தார்.

விரைவில் தமது கல்வியியல் கல்லூரிக்கான புதிய கட்டடங்கள் அமைக்கப்பட இருப்பதாகவும் உலக வங்கி இதற்கென நிதி ஒதுக்கி உள்ளதாகவும் அவர் மேலும் - தெரிவித்தார். (ம-ரி)

## குரு பூசை தினம்

கோப்பாய்,மார்ச்11

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி இந்து மன்றத்தினால் நடத்தப்பட்டுவரும் 63 நாயன்மார் குருபூசை வரிசையில் நாளை செவ்வாய்க்கிழமை 'கோச் செங்கட் சோழ' நாயனார் குருபூசை அனுஷ்டிக்கப்படுகிறது. (ம-73)

## நூலக வாரம்

கோப்பாய்,மார்ச்11

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரியில் இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 2 வாரங்களுக்கு நூலகவாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

நூலக வாரம் குறித்து தினசரி சொற்பொழிவு மற்றும் நூல் சேகரிப்பு என்பன இடம்பெறவுள்ளன. (ம-73)

# அறநெறிப் பாடசாலை மீள் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,மார்ச்11

ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு கதிரேசன் இந்து அறநெறிப் பாடசாலையின் மீள் அங்குரார்ப்பண வைபவம் சிவராத்திரி தினமான நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கதிரேசன் ஆலயத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தியடைப்புப் பகுதிக்கான கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பொதுமக்களின் முயற்சியினால் இந்த அறநெறிப் பாடசாலை நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் நாளை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவுப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவுப் பகுதிகளுக்கான கலாசார உத்தியோகத்தர் ஆகியோர் இந்த வைபவத்தில் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

அறநெறிப் பாடசாலைகளுக்கென இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அன்பளிப்புச் செய்த ஒரு தொகுதி நூல்களும் இந்த வைபவத்தில் வைத்து பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படும். (ம-7)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்11

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் 48ஆவது ஆண்டு விழாவும், சிவராத்திரி விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கழகத்தின் தலைவர் இ.விஜயரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்தவிழாவில் ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ பா.முரளிதரக் குருக்கள் ஆசியுரை வழங்குவார். பிரதமவிருந்தினராக ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய அதிபர் சி.சோமேஸ்வரப்பிள்ளை கலந்துகொள்வார்.

மேற்படி கழகத்தினால் இந்த வருடம் நடத்தப்பட்ட சைவசமய அறிவுப் பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்படும். சமயச் சொற்பொழிவும் வில்லிசை என்பனவும் இடம்பெறும். (ம-7)

# தமிழறிஞர்கள் ஊட்டி வளர்த்த தேசிய உணர்வைப் பேணவேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம்,மார்ச்11

தமிழ் பேரறிஞர்களின் வரலாறுகளைப் படிப்பதுடன் நின்றுவிடாது அவர்கள் ஊட்டிய தமிழ்த் தேசிய உணர்வையும் பேணிவளர்க்க வேண்டும்.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தால் அமரர் க.தங்கராசா நினைவாக வெளியிட்ட 'ராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் வாழ்க்கைச் சரித்திரம்' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புரை ஆற்றிய கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இன்று பல தமிழ் அறிஞர்களின் வரலாறுகள் மறக்கப்பட்டு வருகின்றன. மாணவர்கள் புள்ளிக்காக பெரியார்களின் வரலாறுகளைக் கற்கிறார்களே அன்றி தமிழ் தேசிய உணர்வுடன் அவற்றைக் கற்பதில்லை.

அன்று நாம் கற்ற தமிழ் இன்று எம்மை வாழவைக்கிறது. தமிழை உணர்வுடன் கற்றால் ஒருபோதும் அது எம்மைக் கைவிடாது.

எமக்குக் கற்பித்த பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் வித்தியானந்தன் போன்றோரது வழிகாட்டலே எம்மைத் தேசிய உணர்வுடன் தமிழை வளர்க்கத் தூண்டியது.

சி.வை.தாமோதரம்பிள்ளை 40 ஆண்டுகள் தன் நாட்டைவிட்டுப் பிரிந்து வாழ்ந்த நிலையிலும் தமிழின் பெருமையினை வளர்க்கப் பெரிதும் உழைத்தவர். இவரது சேவை எம்மண்ணில் என்றும் மறைந்துவிடக் கூடாது.

இவரது சேவைகளையும், ஆற்றல்களையும் பற்றி சிங்கப்பூரில் நடைபெற்ற 'உலக அரங்கில் மொழிகள்' என்னும் மகாநாட்டில் 'உலக அரங்கில் தமிழ்' என்னும் பொருள்பற்றிக் கூறியபோது முன்வைத்தேன்.

வரலாற்றுடன் ஒன்றிவிட்ட தமிழ்ப் பெரியார்கள் என்றும் எம்மண்ணில் வாழவேண்டுமானால் மாணவர்கள் தமிழையும், தமிழ்ப் பெரியார்களின் வரலாறுகளையும் விரும்பிக் கற்க வேண்டும்.

புள்ளிக்காகக் கற்கும், கற்பிக்கும் நிலைமை மாறவேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-ரி)

# மற்றவர் பார்த்துப் பின்பற்றும் எடுத்துக்காட்டாக இளைய தலைமுறை நடந்துகொள்ள வேண்டும்

**புலரித நீருக்குடும்பக் கன்னியர் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா ஆற்றிய உரையின் தொகுப்பு இது.**

சர்வதேசரீதியில் கல்லூரி மாணவர்கள்தான் சட்டத்துக்கு உட்படாதவர்கள் என்பது நன்கு அறியப்பட்ட விடயம் என்பதும், இதற்கு இலங்கை மாணவர்களும் விதிவிலக்கானவர்கள் அல்லர் என்பதும் எமக்குத் தெரியும். இளைஞர்கள் என்றாலே அவர்களின் சிறப்பம்சம் அவர்கள் அடங்கிப்போகாதவர்கள், பயமறியாதவர்கள் என்ற கூற்று ஒன்றும் மிகையானதல்ல.

நான் உங்களுக்கு எதனைச் சரியாகச் சொல்லப்போகிறேன என்று எனக்குத் தெரியாது. நான் இளைஞர்களுக்கு ஒருபோதும் நல்ல புத்திமதிகூற முனைவதில்லை ஏனெனில் அவர்கள் பிறக்கும்பொழுதே அவர்களுடைய பெற்றோர்களிலும் பார்க்க மிகவும் புத்திசாலிகளாகப் பிறக்கிறார்கள் என்று கூறப்படுவதனாலாகும். அதற்குப் பதிலாக, நான் இளைய தலைமுறையினரைக் காணும் போதெல்லாம், "காலத்தைக் கடந்து வந்த முதிய பரம்பரையினருக்கு நம்பிக்கை கொள்வதற்கு இதோ ஒரு சந்தர்ப்பம் - முதிய பரம்பரையினர் இதைக்கண்டு தங்கள் நம்பிக்கையை வலுப்படுத்தவும், நம்பிக்கையீனங்களை மாற்றிக்கொள்ளவும், தமது கனவுகளுக்கு புதிய படிம் கொடுக்கவும்; தமது இதயத்தை மறுமலர்ச்சியடையச் செய்யவும் ஓர் அரிய சந்தர்ப்பம்" என எனக்குள்ளே கூறிக்கொள்வேன்.

நான் இளைஞர்களைச் சந்திக்கும் போது - அடங்காப்பிடாரிகளான இளையோர்களைச் சந்திக்கும் போது கூட நான் ஓர் ஆசிரியராக அல்லாது ஒரு சீடன் என்ற படிநிலைக்கு வந்துவிடுவேன். இளையோரான உங்களை எல்லாம் என்னுடைய ஆசிரியர்கள் என்று என்னை உங்களுடைய சீடன் என்றும் சொல்வதைக் கேட்டு நீங்கள் வெறும் பெருமை மட்டும் அடைந்துவிடாதீர்கள். ஏனென்றால், நீங்கள் ஆசிரியர்களாகவும், நான் சீடனாக - மாணவனாக ஆகும் பொழுது உங்கள் மீது பெரும் பொறுப்புக்களும் கடமைகளும் வந்து சேர்ந்துவிடுகிறது. அதற்குப் பதிலாக, ஆசிரியர்களாக இருக்கும் எவரும் பொறுப்பு வாய்ந்தவர்களாகவும், கடமை, கட்டுப்பாடு, கண்ணியம் உடையவர்களாகவும், மற்றவர்கள் பார்த்துப் பின்பற்றவும், எடுத்துக்காட்டாக ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாகவும், பார்த்துப் படித்துக்கொள்ளவும் கூடியவர்களாக ஆகிவிடுகிறார்கள் எனவே, நீங்களும் ஆசிரியர்கள் என்ற உயர்ந்தபடி நிலையில் வைக்கப்படுவதற்கேற்ப உங்களுடைய பொறுப்புணர்ச்சிகளும், நடவடிக்கைகளும் உயர்வடையவேண்டும் என்பதனை மனதில் இருத்திக்கொள்ளுங்கள்.

### இளஞ்சந்ததியினரின் பொறுப்புக்கள்

இன்று நான் அறிவுச் சார்புக்கு அப்பாற்பட்ட ஒன்றைச் செய்யப் போகிறேன். நான் செய்யப்போவது பாரம்பரிய வழிமுறையில் வந்த ஒன்றல்ல; நான் செய்யப்போவது அசாதாரண செயற்பாடாகும். உங்கள் தலைமுறையினர் ஆசிரியர்களாக மாறி எங்கள் தலைமுறையினர் மீது ஒழுக்கத்தை நிலைநிறுத்த கோல் ஏந்தவேண்டுமென நான் கூறும் பொழுது அதனால் நாம் எல்லோரும் சீரிய நேர்மை வழிக்குத் திரும்புவோம் என எதிர்பார்க்கின்றேன். எனது இளைய அன்பர்களே, நீங்கள் எவ்வாறு பல்வேறு பாரம்பரியங்களுக்கு வாரிசுகளாக ஆகின்றீர்கள் என்பதனை உணரவேண்டும். நீங்கள் வாரிசு உரிமை பெறுவது ஒரு கலாசாரத்துக்கோ ஒரு பண்பாட்டுக்கோ மட்டுமல்லாது முழு உலகத்தினதும் கலை, கலாசாரங்களுக்கும், பண்பாடுகளுக்கும் நவநாகரிகங்கள் அனைத்திற்கும் வாரிசுகளாக இருக்கின்றீர்கள். உங்கள் செல்வங்களையும் அவை உங்கள் மீது சுமத்தும் பயங்கரமான பொறுப்புக்களையும் அறிவீர்களா? நீங்கள் ஒவ்வொருவரும் கடந்த காலங்கள் அனைத்திற்கும் பதில் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றீர்கள் என்பதை உணர்வீர்களா? என்றும் அழியாத நேற்றுக்கும் இன்னும் உதயமாகாத நாளைக்கும் இடையிலான பிணைப்பாக நீங்கள் ஒவ்வொருவரும் இருக்கின்றீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஆகவே, நீங்கள் இன்று புதியதொரு சகாப்தத்தின் வாயிற்படியிலே நிற்கிறீர்கள் நீங்கள் ஒரு தனிமனித வாழ்வாக மட்டுமல்லாமல் ஒரு மாபெரும் தேசிய வாழ்வாகவும் நிற்கின்றீர்கள்.

'தேசியம்' என்ற சொல்லுக்கு இளைஞர்கள் வியாக்கியானம் கொடுக்கும்போது குறுகிய அரசியலைக் குறிப்பிடுவது தவறானதாகும். காலத்தின் சிறப்பியல்புகளோடு ஒப்பிடும்போது அதனுள் ஆங்காங்கே நடந்து முடியும் அரசியல் எல்லாம் வெறும் பூஜ்ஜியங்களாகவே ஆகிவிடுகின்றன. அரசியல் எல்லாம் மனிதர்கள் இடைவழியிலே கைவிட்டுப்போகும் ஒரு வகை செயற்பாடுகளே ஒழிய வேறு ஒன்றுமல்ல. எதிர்கால சந்ததியினர் தமக்கு வாரிசு உடைமையாக, தேசியமாக வந்தவற்றை நோக்கும்பொழுது அவர்கள், "அரசியல் வாதிகளாக இருந்து வீராப்புப் பேசியவர்களே நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்று கேட்பதில்லை. மாறாக "உங்களுக்குப் பின்னால் வருகின்ற பரம்பரையினர் வழிநடத்தி ஒளிகாட்டுவதாக அழியாத நிலையான தேசிய வாழ்க்கை விழுமியங்கள் எதனைவிட்டுச் சென்றுள்ளீர்கள்." என்றுதான் கேட்பார்கள். "எதிர்காலச் சந்ததியினர் எம்மிடமிருந்து எதிர்பார்க்கப்போகும் வலுவான நம்பிக்கையை எப்படி நாங்கள் நிறைவு செய்யப்போகிறோம்" என்று நீங்களும் உங்களையே கேட்டுப்பாருங்கள். நீங்கள் இன்றைய காலத்தைப் பற்றியே மட்டும் சிந்திப்பவர்களாக இருக்கக்கூடும் ஆனால் நான் நாளையைப் பற்றித்தான் கேட்கிறேன். ஏனெனில், இன்றைய நாளின் குழந்தையே நாளை எனப்படுகிறது. நீங்கள் உங்களையே, "நாம் அடிமைகளா?" என்று கேட்டுப்பாருங்கள் "எங்களுக்கு அரசியல் ரீதியாக சந்தர்ப்பம் இல்லை என்பதனால் - ஆம்" என்று கூறுவதாக இருக்கலாம். ஆனால் நான் கூறவிரும்புவது அத்தகைய அடிமைத்தனத்தைப் பற்றியல்ல. எம்மைக் கட்டி அடக்கி வைத்துள்ள பல அடிமைத்தனங்களில் அது ஒரு சிறு பகுதியாகும். எம்மை கட்டிவைத்து உதைத்து வீழ்த்தி மண்கவ்வச் செய்யும் அடிமைப்படுத்தல்கள் பல எங்கள் ஆத்மாவுக்குள் உறைந்து கிடக்கின்றன. பொய்மை பலவீனத்திலான இயலாமை, கோழைத்தனம் என்ற அடிமைத்தளைகளால் சிறைப்பட்டிருக்கும் நாம், அந்த மூவகைக் குணம் கொண்ட சிறைக்குள் இருந்து வெளியேறும் வரை நாங்கள் இனி வரப்போகும் நாளைய தலைமுறையின் உண்மையான தந்தையர்களாகுவதற்கு தகுதியற்றவர்களாவோம். நான் உங்களுக்குக் கூறவிரும்புவது ஒன்று உள்ளது. இன்றைய பரம்பரையின் பங்காளிகளாகிய நீங்கள் நாளைய பரம்பரையினருக்கு எதனைக் கையளிக்கப்போகிறீர்கள் அது நேற்றைய பரம்பரை உங்களுக்கு விட்டுச் சென்றதிலும் பார்க்க எவ்வளவு உயர்வானது என்று உங்களையே நீங்கள் கேட்டுப்பாருங்கள்.

### இளைஞர்கள் எப்போதும் புரட்சியாளர்களே

எங்களுடைய பெற்றோர் செய்த தவறுகள் எல்லாம் புத்திசாலித்தனமானவை என்பதனால்தான், இன்று நாம் வளர்ந்து வாழ்ந்து சரியானவர்களாக இருக்கிறோம். அதுதான் இயற்கையின் பரிணாமம் என்ற தத்துவமாகும். அதுதான் இயற்கையில் நியதி; வளர்ச்சியின் நியதியுமாகும். இங்கே நான் குறிப்பிடும் வளர்ச்சி என்பது ஒவ்வொரு பரம்பரைகளும் தனக்கு முந்திய பரம்பரை விட்டுச் சென்ற வாழ்க்கை நெறி விழுமியங்களை விரிவாக்கி இன்றைய தவறுகளைத் திருத்திக்கொள்வதாகும். கனடாவிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் அண்மையில் பல நகரங்களைச் சென்று பார்த்துவரும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இன்னதென்று சொல்ல உணரமுடியாத ஏதோ ஒரு சக்தியினால் கற்றுக்கொள்ளவும் அறிந்துகொள்ளவும் கூடிய அனுபவங்களைப் பெறமுடிந்தது. அவற்றில் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். அதிலும் இளைஞர்கள் தொடர்பாக அறிந்து, உணர்ந்த சிலவற்றை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். அங்குள்ள இளைஞர்களின் மனப்பாங்கு, நடத்தை என்பன என்னை மிகவும் கவர்ந்து சிந்திக்க வைத்தது. எமது கலாசார குடும்ப உறவுகளின் உணர்வுகளிலும் பார்க்க அவர்களது உள்ளுணர்வுகள் பரந்து விரிந்ததை அவதானிக்கமுடிந்தது. அல்லற்படுபவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும் மனவுறுத்தலையும் தன்னலமற்ற பரந்த மனப்பான்மையுடையவர்களாகவும் கர்வம் கொள்ளாதவர்களாகவும் காணப்பட்டனர். எமது இளைஞர்கள் அவர்களிடம் இருந்து கற்று பின்பற்ற வேண்டிய அம்சங்கள் அளப்பரியன என எண்ணுகிறேன்.

### அறிவை வாழ்வோடு தன்னியற்படுத்தல்

இளம் மாணவர்களே, உங்கள் கல்லூரியிலே நீங்கள் என்ன கற்கிறீர்கள் என்று உங்களையே நீங்கள் வினவுங்கள். கலையோ, விஞ்ஞானமோ எதுவாக இருப்பினும் உங்கள் வகுப்பறையில் வைத்து பாடப் புத்தகங்களை மட்டுமா நீங்கள் படிக்கிறீர்கள்? நீங்கள் படிப்பது கற்பது எல்லாம் உங்களுடைய சீவனோபாயத்திற்காக ஏதும் தொழிலைத் தேடிக்கொள்வதற்காகவா? நீங்கள் கலைகளையும் அறிவியலையும் கற்பது எல்லாம் எதுவும் ஒரு சிறு உழைப்புக்காக எவரோ சிறு சிறார்களின் ஆத்மாக்களை பாடசாலை மேசை கதிரைகளில் அமர வைத்து கசங்குண்டு போகச் செய்வதற்காகவா? இல்லை! இல்லை! நீங்கள் கற்பது எல்லாம் ஒரு பெரும் முக்கியமான தேவைக்காகும். அது அப்படி ஆகவும் வேண்டும். அறிவு என்பது வாழ்க்கையின் விழுமியங்களுடன் ஒன்றுசேராத வரை அது வெறும் அறிவாக மட்டுமே இருக்கும். தூய கணிதம் ஒரு குறுகிய மனப்பான்மை கொண்ட மூடனாக ஒருவனை ஆக்கும் என்றால் யார்தான் தூயகணிதத்தைப் பொருட்படுத்துவார்கள்? உலகின் ஏனைய மனிதர்களின் இதய தாக்கங்களுடன் இணைந்து துடிக்காத உணர்வுகள் அற்ற கவிதைகளை புனையும் எவரையும் யார்தான் மகா கவிஞன் என்று மதிப்பார்கள்? நீதியை நிலை நிறுத்துவதற்காக தனது சட்ட அறிவைப் பயன்படுத்தாத எவரேனும் சட்ட வல்லுனரை யார்தான் மதிப்பார்கள்? ஒரு வைத்தியர் உடலைச் சுகப்படுத்துவது போல் உள்ளத்தையும் ஆத்மாவையும் சுகப்படுத்த முடியாதுவிட்டால் எப்படி அவரை ஒரு நல்ல வைத்தியராகக் கணிக்கமுடியும்?

(வளரும்)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இலக்கியக் கட்டுரைகள்

க.பொ.த. மாணவர்களே! உங்கள் எது 12 சிறுகதைகளுக்கு விளக்கங்கள் எழுதியுள்ளார் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. மாணவர்கள் நடிப்பதற்கு மிகப் பொருத்தமான "பரிசு" நாடகமும் இதில் உண்டு. 38, கட்டுரைகள் ரூபா 125.00. (1443)

## இலகு திருமண சேவை

1964, விசாகம், செவ்வாய் 7, பட்டதாரி ஆசிரியைக்கு அரச/தனியார் மணமகன் உள்ளூர்/வெளியூரில் தேவை. சீதனம் உண்டு. விவாகரத்துப் பெற்ற மணமக்கள் இருபாலாரும் தேவை. துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (1528)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1972இல் பிறந்த, விசாகம் 2ஆம் பாதம், லக்கினத்தில் கேது B.Sc.Eng.(Hons) அரசாங்கத்தில் பொறியியலாளராகத் தொழில் செய்யும் ஒருவருக்கு இதே குடும்பப் பின்னணியில் நற்குணமுடைய M.B.B.S. 4ஆம் அல்லது இறுதியாண்டு அல்லது உள்ளகப் பயிற்சி அல்லது தொழில் பார்க்கும் மணப்பெண் தேவை. தொடர்பு: விளம்பர இல.1482, C/o உதயன். (1530)

## விற்பனைக்கு

கலர்மீன் வகைகள், மீன் தொட்டிக்குரிய அலங்காரப் பொருள்கள் மற்றும் லவ்பேட்ஸ், குருவிகளும் விற்பனைக்கு உண்டு. 40/17, சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம். (1408)

புதிய, பழைய வீடியோ C.D. பிரதிகள் (S.K.C.), 2060 SONY 21" T.V., ஏசியா, யப்பான் சைக்கிள் 18" (LADIES) என்பன உடன் விற்பனைக்கு உண்டு. 156, அரசடி வீதி, நல்லூர். (1522)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய், கோப்பாய் றோட்டில் முருகன் வீதியில் 15 பரப்புக் காணியும், புதிய வீடும் விற்பனைக்கு உண்டு. (பகுதியாகவும் கொடுக்கப்படும்) தொடர்பு: திரு.பொன்னுத்துரை, C/o கிராம சேவையாளர், முருகன் வீதி, உரும்பிராய். (1531)

## சமய சந்நிதி

குருநகர்,மார்ச்11

அல்வாய், சக்கோட்டை புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலய வருடாந்த திருநாள் கொண்டாட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் இம்மாதம் 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. நாளை செவ்வாய்க்கிழமை நற்கருணை ஊர்வலத்தையும் மறுதினம் புதன்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (7-51)

## சைக்கிள் திருடியதாக சிறுவன் கைது!

யாழ்ப்பாணம்,மார்ச்11

இரு சைக்கிள்களைத் திருடியதாகக் கூறப்படும் 16 வயதுச் சிறுவன் ஒருவன் கோப்பாய்ப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான்.

அண்மையில் நல்லூர் கொண்டலடி வீதியில் உள்ள ஒரு வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த பெண்களுக்கான சைக்கிள் ஒன்றையும் ஆண்களுக்கான சைக்கிள் ஒன்றையும் திருடி கல்வியங்காட்டுப் பகுதியிலுள்ள சைக்கிள் கடை ஒன்றில் இந்தச் சிறுவன் விற்பனை செய்ததாகக் கூறப்படுகின்றது.

சைக்கிள் உரிமையாளரின் முயற்சியினால் நேற்று முன்தினம் சைக்கிள் கடையில் இனங்காணப்பட்டு கோப்பாய் பொலீஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டது.

சைக்கிளைத் திருடிய திருநெல்வேலியைச் சேர்ந்த 16 வயதுச் சிறுவன் கோப்பாய் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குடாநாட்டில் சைக்கிள் திருட்டு அதிகரித்து வருவதால் சைக்கிள் பாவனையாளர்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு கோப்பாய் பொலீஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி கோரியுள்ளார். (ஏ-130)

# யாழ்.சிறைச்சாலைக்குச் சென்று நீதிவான் விக்னராஜா பார்வையிட்டார்

## வழங்கப்படும் உணவு குறித்தும் ஆராய்ந்தார்

யாழ்ப்பாணம்,மார்ச்11

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கான உணவு விநியோகம் தொடர்பாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து யாழ்நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா நேற்று சிறைச்சாலைக்கு விஜயம் செய்து விசாரணை நடத்தினார்.

சிறைச்சாலைக்கு ஒப்பந்த அடிப்படையில் உணவுப் பொருள்களை வழங்கிவரும் ஒப்பந்தகாரரை விசாரணை செய்த நீதிவான் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்கள் கைதிகளுக்கு வழங்கப்படுவதை உறுதிசெய்யுமாறும் - தொடர்ந்தும் உணவு விநியோகம் குறித்து முறைப்பாடுகள் கிடைப்பின் அது குறித்துக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - தெரிவித்தார். (ம-7)


## வீடு விற்பனைக்கு

கோண்டாவில், பலாலி வீதி, இராசையா ஒழுங்கையில் (பாம், ஸ்கூல், சுற்றாடல்) 20 பரப்புக் காணியும், விஸ்தீரணமான வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: திரு.இராசேந்திரம்,
C/O தியாகராஜா,
(1532) நெட்டிலிப்பாய்ப் பிள்ளையார் கோயிலடி, கோண்டாவில்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலையின்
பழைய மாணவர் சங்க பொருளாளராகவிருந்து,
பாடசாலையின் வளர்ச்சிக்குப் பலவழிகளில் உதவிபுரிந்த
அமரர்
**சண்முகம்பிள்ளை கதிர்காமன்**
*(உரிமையாளர், கதிர்காமன் இரும்புத் தொழிற்சாலை)*
அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/சன்மார்க்க ம.வி.,*
*மணிக்கூட்டு வீதி,* - பாடசாலைச் சமூகம்
*யாழ்ப்பாணம்.* (1529)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16 - 12 - 1922 மறைவு 21 - 02 - 2001

**திருமதி பூரணம் அருளம்பலம்**
(கைதடி - நுணாவில்)

எம் குடும்ப ஒளிவிளக்கே!
பாசத்தின் பிறப்பிடமே!
வருடங்கள் போனாலும்
ஆறாது எம் சோகம்
மாறாது உங்கள் நினைவு.

*'குமரவாசா',*
*கலைமணி வீதி,* - குடும்பத்தினர்.
*கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.* (1533)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 08 - 11 - 1941 விண்ணில் 11 - 03 - 2001

அமரர்
**ஆறுமுகம் மகாலிங்கம் (S.L.A.S.)**
(முன்னாள்பிரதேச செயலர் - வலிகாமம் தென்மேற்கு, உடுவில் - உபதலைவர் - இந்துசமயப் பேரவை)

நீதியின்பால் நின்று நிர்வாகம் செய்தவரே
பாதியில் எமைவிட்டு பரமன்பதம் சென்றீரே
நாதியற்று இம் மண்ணில் நாமிருக்க நல்ல
சேதிவரும் தேதி தெரிந்து வரவோ அந்த
சோதிநிறை சொக்கனிடம் சென்றீர் ஐயா!

*பிரதேச செயலகம்,* பிரதேச செயலக
*வலிதெற்கு, உடுவில்.* (1517) நலன்புரிச் சங்கத்தினர்.


## பராமரிப்பும் திருத்துதலும்

போட்டோ பிரதி இயந்திரம்
றோணியோ இயந்திரம்
தட்டச்சு இயந்திரம்
ரீ.வி., டெக், றேடியோ

முதலியனவும் மற்றும் சகல விதமான மின்னியல் இலத்திரனியல் சாதனங்களும் தகுதிவாய்ந்தவர்களினால், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

**யூரோவில் எலக்ரோனிக்ஸ் (தவது) வது**
Euroville Electronics [Pvt] Ltd
51, யமுனா வீதி,
நல்லூர்.

தொலைபேசி :- 021 - 2849
email : eurovil@sltnet.lk (1510)


## யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை

## வருடாந்த மெய்வல்லுநர் போட்டி 2002

*காலம்* : இன்று (2002-03-11) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணி
*இடம்* : பாடசாலை மைதானம்
*தலைவர்* : திருமதி ஞ.ரவீந்திரநாதன் *(முதல்வர்)*
*பிரதம விருந்தினர்* : லயன் கு.சிவபாலன்
*(பொறியியலாளர் - மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்)*
*சிறப்பு விருந்தினர்கள்* : திரு.இ.சிவஞானசுந்தரம்
*(உதவிக் கல்விப் பணிப்பாளர், கோப்பாய்)*
திரு.யூ.புலேந்திரராஜா
*(நிர்வாக உத்தியோகத்தர், மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்)*
திரு.நா.சுவாமிநாதன்
*(சேவைக்கால ஆலோசகர், கோப்பாய்)*
*கௌரவ விருந்தினர்* : திரு.R.ஜெயராஜா
*(உரிமையாளர், 'சுப்ப குஸ்' கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)*
*பரிசில் வழங்கல்* : திருமதி வசந்திமாலா சிவபாலன்
*(அதிபர், யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்)*

இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-பாடசாலைச் சமூகம்

அனுசரணை வழங்குவோர்:

| | |
|---|---|
| றூபா பன்முக வர்த்தகம், 104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | சுந்தர்சன் T.P.2751 மத்திய சந்தை முன்பாக, மானிப்பாய். |
| தேனு களஞ்சியம், நவீன சந்தை, திருநெல்வேலி. | நிசல்வம் ஸ்ரோர்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| யசோ மோட்டோர்ஸ் 163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | யசோ பான்சி பலஸ் பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. |
| வசந்தம் மருந்தகம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | ஸ்ரீசரவணா விற்பனை நிலையம் No.10, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். |

மேற்படி நிகழ்வு சிறப்புற ஆதரவு புரிகின்ற அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

(1524) திருமதி ஞ.ரவீந்திரநாதன்

## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 27 - 11 - 1932 ஆறுமுகன் அடியில் 20 - 02 - 2001

**திருமதி குமாரசுவாமி தையல்முத்து**
(நெடுந்தீவு மேற்கு 5ஆம் வட்டாரம்)
திதி: 11.03.02. திரயோதசி

குடும்பத்தின் குலவிளக்காய்
குவலயம் போற்ற எமக்கு
வாழ்வளித்த அன்புத் தாயே!
காலத்தால் அழியாக் காவியமாகி
பாசப்பிணைப்புடன் எம்மை
வழி நடத்தி வாழ்விக்கும் உங்கள் நினைவுகள்
காலங்கள் கரைவதால் மறந்திடல் இல்லை - என்றும்
எம் நெஞ்சம் சுமக்கும் பசுமையான நினைவுகளாகும்.

*நீதிராசா வீதி,* *அம்மா உன் நினைவுகளுடன்:*
*கொக்குவில் மேற்கு,* அன்புக் கணவர், பிள்ளைகள்,
*கொக்குவில்.* (1460) மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# வாசகர் திருமுகம்

## இவர்களைத் தட்டிக் கேட்பது யார்?

நீதிபதிகள் மற்றும் புத்திஜீவிகள் பலரும் மாணவர்களின் தற்போதைய ஒழுக்கம் பற்றியும் அவர்களின் நல்வாழ்வு பற்றியும் செய்தி ஊடகங்கள் வாயிலாகவும், வைபவங்கள் - கலந்துரையாடல்கள் - கூட்டங்கள் வாயிலாகவும் பலமுறை ஆலோசனைகள், புத்திமதிகள் வழங்கி உள்ளனர்.

ஆனால் அவை செவிடன் காதில் ஊதிய சங்குக்கு ஒப்பாக எதிர்மறையில் தொடர்வது வேதனைக்குரிய விடயமாகும்.

"கெடுகுடி சொற்கேளாது, சாகிறவன் மருந்து குடி ்ன்"என்பது போல ஒருசில மாணவர்களின் ஒழுக்கமற்ற அடாவடித்தனங்களால் முழுக் கல்விச் சமூகமுமே வெட்கித் தலைகுனியவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

28.02.2002 வியாழக்கிழமையன்று பாடசாலை முடிவடைந்து வேம்படி மகளிர் கல்லூரிக்குச் சமீபமாகவுள்ள பேருந்துத் தரிப்பிடத்துக்கு நடந்து வந்துகொண்டிருந்தபோது அந்த வீதியால் யாழ்.நகர் நோக்கி வந்து கொண்டிருந்த பாடசாலை சேவைப் பேருந்தில் இருந்து பிரயாணஞ் செய்த மாணவனொருவன் பேருந்துக்கு வெளியே கையை நீட்டி எனது தலையில் அணிந்திருந்த தொப்பியை "லபக்கென்று" கழற்றிச் சென்று விட்டார்.

சம்பந்தப்பட்ட மாணவர் தொப்பியொன்றை வாங்க வசதியில்லாத காரணத்தாலா அல்லது பெண் சகோதரங்களுடன் பிறக்காத காரணத்தாலா இத்தகைய சேஷ்டைக் கைங்கரியத்தைச் செய்ய முனைந்தாரென்பது புரியாத புதிராகவே உள்ளது.

அத்துடன் மாணவர்கள் சிலர் தொடர்ந்தும் துவிச்சக்கரவண்டிகளில் சமாந்தரமாகச் சென்று பலருக்கும் இடைஞ்சல் விளைவிப்பதுவும் தொடர்கதையாகவே உள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

"எங்களுக்கும் காலம் வரும் காலம் வந்தால் வாழ்வு வரும்" என்ற கூற்றுப்படி எங்கள் பாதுகாப்புக்குரிய காலம் கனிந்து கொண்டிருக்கிறது. துஷ்டர்களின் கொட்டம் புதிய நிர்வாகத்தினால் அடக்கப்படும் காலம் நாள்கணக்கில் எண்ணப்பட்டுக்கொண்டிருக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

யாழ்ப்பாணம். **பாதிக்கப்பட்ட மாணவி.**

## வர்த்தகர் சங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கடைச்சல் பட்டடைகள், சேவிஸ் ஸ்ரேசன்கள் போன்ற தொழில் ஸ்தானங்களில் கடமையாற்றும் தொழிலாளர்களை காலை 7 மணிதொடக்கம் மாலை 6 மணிவரை (மதிய உணவு எதுவும் அருந்துவதற்கு இடைவேளை வழங்காது) வேலை வாங்குகின்றனர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உரிமையாளர்கள்.

இதனால் மேற்படி தொழிலாளர்கள் பல்வேறு விதமான நெருக்கடிகளை, உளத்தாக்கங்களைச் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மேற்படி தொழிலாளர்கள் நாளாந்தம் 8 மணி நேரம் வேலை செய்வதற்கு உரிய வழிவகை செய்யப்பட வேண்டும். யாழ். மாவட்ட வணிகர் கழகம் இந்த விவகாரம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

அதேவேளை - பூரணைதின விடுமுறை, அரச பொதுவிடுமுறை, சனிக்கிழமை அரைநாள் விடுமுறை என்பனவும் மேற்படி ஊழியர்களுக்கு கிடைப்பதில்லை. இது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணம். *பாதிக்கப்பட்ட ஊழியர்கள் சார்பில்*
***கே.எம்.தாஸ்***

# மக்கள் முகம்

மல்லாகத்தைச் சேர்ந்த ஈ.எஸ்.விஜயராசசிங்கம் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.




இவர் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் சிரேஷ்ட கணித ஆசிரியராகவும், பிரிவுத் தலைவராகவும் சேவையாற்றி ஓய்வு பெற்றவர். பின்னர் வடமாகாண புற்று நோய், எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கத்தில் உப - பொருளாளராகவும், யாழ்.மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தில் பொருளாளராகவும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி.வடக்குப் பிரிவின் தலைவராகவும், மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலயம், நீலியம்பனைப் பிள்ளையார் கோயில், முருகமூர்த்தி தேவஸ்தானம், மல்லாகம் மகா வித்தியாலயம் மற்றும் கனிஷ்ட வித்தியாலயங்களின் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் கணக்காய்வாளராகவும் தற்போது பணியாற்றி வருகிறார்.

சமூக சேவைத்திட்டங்கள் பலவற்றில் ஈடுபட்டுவரும் இவர் பிரதேசத்தின் சமூக, கலாசார, சமய மேம்பாட்டுக்காக பல்வேறு வழிகளிலும் உதவி வருகிறார். (7-27)

* * *

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட நாடகப் பிரதியாக்கப் போட்டியில் து.துசியந்தன் எழுதிய 'அக்கரைப் பச்சை' என்னும் நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.



கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவனும், யாழ். இந்துக் கல்லூரியில் சித்திர பாட ஆசிரியராகக் கடமையாற்றிவருபவருமான இவர் தற்போது கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில், ஆசிரிய மாணவனாக இருக்கிறார்.

இவரது நெறியாள்கையில் உருவான நாடகம் அண்மையில் யாழ். இந்துக் கல்லூரியின் கொழும்பு மாவட்ட பழைய மாணவர் சங்கத்தினால் கொழும்பில் மேடையேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-86)

* * *



பருத்தித்துறை நகரசபையில் முதலாம் தர தமிழ் தட்டெழுத்தாளராக கடமையாற்றும் சுப்பையா ஜெகதீசன் தட்டெழுத்தாளர் சேவையின் அதிசிறப்பு வகுப்புக்கு வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

கடந்த 1996ஆம் ஆண்டு ஜுன் தொடக்கம் இந்தப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது. (7-117)

## சமய அறிவு போட்டி

வடமராட்சி கிழக்கு,மார்ச்11

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை, மகா சிவராத்திரி விழா அன்று பாடசாலை மாணவர்களுக்கிடையே சமய அறிவுப் போட்டியொன்றினை நடத்தவுள்ளது.

மருதங்கேணி கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படவிருக்கும் இப்போட்டிக்கு ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 10ஆம், 11 ஆம் தர மாணவர்களிடையே தெரிவு செய்யப்பட்ட மூன்றுபேர் கொண்ட குழு ஒன்றினை அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்கள் கோரப்பட்டுள்ளனர். (ம-182)

## கொழும்பில் மின்வெட்டு நேரம் குறையும்?

கொழும்பு,மார்ச்11

கொழும்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் ஐந்து மணிநேர மின்வெட்டு, அடுத்துவரும் நாள்களில் குறைக்கமுடியுமா என்பது குறித்து மின்சாரசபை ஆராய்ந்து வருகிறது.

தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து அடுத்த சில தினங்களில் 100 மெகாவோட்ஸ் மின்சாரம் கொள்வனவு செய்யப்படவிருக்கிறது. அத்தோடு மின் உற்பத்தி நிலையங்களின் நீர்த்தேக்கப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக மழை பெய்துவருகிறது. இக்காரணங்களினால் மின்வெட்டு நேரத்தைக் குறைக்க முடியும் என்று மின்சார சபை எதிர்பார்க்கின்றது. (ம)

## வீதிகளை திருத்தித் தருமாறு கோரிக்கை

கொழும்பு,மார்ச்11

கிழக்கில் வீதிகளைத் திருத்தித் தருமாறு மக்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிழக்கில் சோதனைச்சாவடிகள் நீக்கப்பட்டுள்ளதுடன் சோதனைக் கெடுபிடிகள் குறைந்துள்ள நிலையில் போக்குவரத்துக்கள் அதிகரித்துள்ளன. எனவே போக்குவரத்துக்கு வசதியாக வீதிகளைத் திருத்தித்தருமாறு அவர்கள் கோரியுள்ளனர். (ம-ரி)

## சந்திரிகா.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும் படையினரும் விடுதலைப் புலிகளும் போக்குவரத்தை மேற்கொள்வது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. 15.01.1995 அன்று விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் தமிழ்ச்செல்வன் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஆயுத பாணிகளாகச் சென்றுவர ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டியிடம் விண்ணப்பித்திருந்தார். இந்தக் கோரிக்கைக்குப் பதிலளிக்கும விதத்தில் அனுப்பிய கடிதத்தின்மூலம 21.01.1995முதல் கிழக்கு மாகாணத தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சென்றுவர அனுமதி வழங்கப்பட்டது.

2002 புரிந்துணர்வு உடன்பாட்டிற்கமைய இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்கு விடுதலைப புலிகளின் உறுப்பினர்கள் நிராயுத பாணிகளாக - சாதாரண உடை அணிந்து சென்றுவரமுடியும். அதே போலவே படையினரும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் நிராயுத பாணிகளாக, சாதாரண உடையில் சென்றுவரமுடியும். இந்த அனுமதி 30,60,90 நாள்களுக்கு என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

1995 உடன்பாட்டில் எரிபொருள் தொடர்பான வரையறைகள் எவையும விதிக்கப்படவில்லை. ஆனால் 2002 உடன்பாட்டின்படி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சகல வாகனங்களும் அரச அதிபர் பணிமனையில் பதிவுசெய்யப்படவேண்டும். அந்த வாகனங்களுக்கு வழங்கப்படும டீசல் மற்றும் பெற்றோலின் அளவு வாரம் ஒன்றுக்கு என்ற அடிப்படையில வரையறுக்கப்பட்டுள்ளது.

இவற்றின்படி 1995இல் சந்திரிகாவும், பிரபாகரனும் கைச்சாத்திட்ட உடன்பாட்டிற்கும் 2002இல் ரணிலும் பிரபாகரனும் கைச்சாத்திட்ட உடன்பாட்டிற்கும் இடையில் அடிப்படையில பாரிய வித்தியாசங்கள் எவையுமில்லை. அடிப்படை விடயங்களை எடுத்துக் கொண்டால் இரண்டு உடன்பாடுகளும் ஒத்தனவாகவே காணப்படுகின்றன.

சாதாரண வாழ்க்கைக்கு வசதியாக தளர்த்தப்பட்டுள்ள விடயங்கள் 2002 உடன்பாட்டில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இருப்பினும் உடன்பாட்டில் என்ன நிபந்தனைகள் சேர்க்கப்பட்டிருப்பினும் அவற்றின் முன்னேற்றம் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதிலேயே தங்கியுள்ளது. அதைக் காலம்தான் தீர்மானிக்கும். ☆

# கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கவின்கலை மன்றத்தின் நான்காவது ஆண்டு நிறைவுவிழா அண்மையில் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவின் ஆரம்பநிகழ்வாக இடம்பெற்ற ஸ்ரீ தியாகராஜா ஸ்வாமிகளின் ஆராதனை நிகழ்வைப் படத்தில் காணலாம்.

கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரன், மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ப.த.வீரமணிஐயர், சித்திரபாட முதன்மையாசிரியர் எஸ்.கருணலிங்கம், பிரதிஅதிபர் பொ.மகேஸ்வரன் மற்றும் ஆசிரியர்கள் பிரார்த்தனையில் ஈடுபடுகின்றனர். (ம-7)



யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் (சென்பற்றிக்ஸ்) வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

விளையாட்டு நிகழ்வில் முதல் நிகழ்வாக இடம்பெற்ற அணிவகுப்பு மரியாதையை முதன்மை விருந்தினரான கல்லூரியின் பழைய மாணவனும் உதவிப் பொலீஸ் அத்தியட்சகருமான ஆர்.ஈ.சித்திரரஞ்சன், சிறப்பு விருந்தினரான ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அருட்திரு.ஏ.யேசுதாஸ் அடிகளார் ஆகியோர் ஏற்பதைப் படத்தில் காணலாம். அருகில் கல்லூரியின் பதில் அதிபர் ஜெறோ செல்வநாயகம், ஆசிரியர் எஸ்.சகாயராஜா ஆகியோர் காணப்படுகின்றனர். (ம-7-8)



இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

கல்லூரி அதிபர் துரை எங்கரசு வரவேற்புரை நிகழ்த்துவதையும், பிரதம விருந்தினரான திருமதி பதஞ்சலி சிவபாக்கியம் சிறப்புரை ஆற்றுவதையும் படத்தில் காணலாம். அருகில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களான திருமதி தவமணி கனகசபாபதி, திருமதி ரி.விநாயகமூர்த்தி ஆகியோர் காணப்படுகின்றனர். (ம-7-4)



வட.இந்துமகளிர் கல்லூரியில் இயங்கும் யாழ்.பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகில் பயிற்சியை முடித்துக் கொண்ட, முன்பள்ளி ஆசிரியர்கள், ஆங்கிலக் கற்கை நெறி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவத் துறையின் பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம் ஆகியோர் துறைசார் உத்தியோகத்தர்களுடன் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது. (ம-7-180)

# விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை ஆஸ்திரேலியா நீக்கும்?

சிட்னி,மார்ச்11

ஆஸ்திரேலியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்குவதற்கான வாய்ப்புகள் இருப்பதை நிராகரித்துவிடமுடியாது என்று அந்த நாட்டின் பிரதமர் ஜோன் ஹவார்ட் கூறியிருக்கின்றார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை எமது அரசு நீக்குவது குறித்து 'ஆம்' அல்லது 'இல்லை' என்று திட்டவட்டமான ஒரு பதிலை அளிப்பதற்கு வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸாண்டர் டௌனரின் ஆலோசனை எனக்குத் தேவை.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்தாகியுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை ஆஸ்திரேலிய இராஜாங்கத் தலைமை வரவேற்கிறது.

இந்தச் சமாதான முயற்சிகள் வெற்றிபெறும் என்று நான் திடமாக நம்புகின்றேன்.

விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பான எமது அரசின் நிலைப்பாட்டைத் தற்போது கூறுவதற்கு என்னிடம் போதிய தகவல்கள் இல்லை என்றே உணர்கிறேன் - என்றார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் தான் விடுதலைப் புலிகள் அமைப்பை ஆஸ்திரேலியா தனது நாட்டில் தடைசெய்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## மட்டக்களப்புப் பகுதியில்

# ஆயுதக் கையளிப்புத் தொடர்பாக வரதர் அணி பொலிஸாருடன் பேச்சு

ஆயுதங்களைக் கையளிப்பது தொடர்பாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளுடன் பேச்சு நடத்த இருக்கிறோம் என்று மட்டக்களப்பு மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் பொறுப்பாளர் இ.துரைரத்தினம் நேற்றுத் தெரிவித்தார்.

அரசு - விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையை வரவேற்ற அவர் மேலும் கூறியதாவது:-

நாங்கள் ஜனநாயகப் பாதையில் செல்லும் ஓர் அமைப்பு. இந்த அமைப்பு இராணுவக் குழுவாக இன்று பலராலும் சுட்டிக்காட்டப்படுகிறது. எமது குழுவுக்கு அரசாங்கத் தரப்பே ஆயுதங்களை வழங்கியிருந்தது.

இந்த ஆயுதங்களை அவர்களிடமே திருப்பிக் கையளிக்கத் தயாராக இருக்கிறோம். ஆயுதக் கையளிப்பைச் சட்டப்படியே செய்ய விரும்புகிறோம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வடமராட்சியில் கேபிள் தொலைபேசி அமைக்கும் பணிகள் நடக்கின்றன

வடமராட்சி கிழக்கு,மார்ச்11

வடமராட்சியில் 'லங்கா ரெலிகொம்' நிறுவனம் கேபிள் தொலைபேசி இணைப்புக்களை வழங்கும் வேலைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது.

நெல்லியடி மாலி சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள 'லங்கா ரெலிகொம்' நிறுவன அலுவலகத்திற்கு கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வந்து சேர்ந்துள்ளன.

'லங்கா ரெலிகொம்' நிறுவன ஊழியர்கள் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவேண்டிய இடங்களுக்கு, தொலைபேசிக் கம்பங்களை எடுத்துச்சென்று அதனை நடும் நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளதையும் காணமுடிகிறது. (ம-182)

# திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் மீண்டும் பல ஆண்டுகளின் பின் சிவராத்திரி

## 50 ஆயிரத்துக்கும் அதிக மக்கள் கூடுவர் என எதிர்பார்ப்பு

மகா சிவராத்திரி தினத்தையொட்டி நாளை திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு ஐம்பதாயிரம் தொடக்கம் எழுபதினாயிரம் வரையிலான பக்தர்கள் வருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல வருடங்களுக்குப் பின்னர் இராணுவக் கட்டுப்பாடுகள், கெடுபிடிகள் எதுவுமின்றி திருக்கேதீஸ்வரத்தில் மகா சிவராத்திரியையொட்டி நான்கு சாமப்பூஜைகளுடன் இம் முறைதான் நடைபெறவிருக்கின்றது.

திருக்கேதீஸ்வர ஆலய புனரமைப்பு வேலைகள் முடிவுற்று இருந்தாலும் திருக்கேதீஸ்வரநாதன் கோயில கொண்டிருக்கும் மூலஸ்தானத்தில் இம்முறை சிவராத்திரி பூஜைகள் இடம்பெறமாட்டாது.

பல வருடங்கள் இராணுவத்தின் பிடியில் இருந்த இந்த ஆலயத்தில் வழமைபோன்ற பூஜைகளை நடத்துவதற்கான பிராயச்சித்த நடவடிக்கைகள், சாஸ்திரப்படியான சடங்குகள் இன்னும் பூர்த்தியாகவில்லை. அவை முடிவுற்ற பின்னரே மூலஸ்தானத்தில் பூஜைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இம்முறை மகா சிவராத்திரியின் போது நான்கு சாமப் பூஜைகள் பாலாவிக் கரையிலுள்ள விநாயகர் ஆலயத்தில் நடைபெறும். வசந்த மண்டபத்தில் பிரசங்கங்களும், கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ம)

# களுபோவில குண்டுவீச்சுக்கு தப்பியோடிய சிப்பாயே காரணம்

கொழும்பு,மார்ச்11

களுபோவில ஸ்ரீ சரணங்கர வீதியில் ஐ.தே.க. தேர்தல் கூட்டத்தில் குண்டு வீசியவர் இராணுவத்தை விட்டுத் தப்பியோடிய ஒருவர் என்று இனங்காணப்பட்டிருக்கிறார். ஆனால் அவர் நேற்றுவரை கைதுசெய்யப்படவில்லை.

இக்குண்டு வீச்சு சம்பவத்தில் மொத்தம் ஐந்து பேர் பலியாகினர். அவர்களில் ஒருவர் பெண் என்பதும் - குறிப்பிட்ட சந்தேகநபர் ஒரு பெண்ணுடன் கொண்டிருந்த நட்புறவே இந்த மோதலுக்கு அடிப்படைக் காரணம் என்று கூறப்படுவதும் - தெரிந்தவையே.

இது தொடர்பாக முன்னர் நடந்த தகராறு ஒன்றில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (ம)

# திருமலையில் 'பொங்குதமிழ்' எதிர்வரும் 19 இல் நடக்கும்

திருகோணமலையில் மக்கள் எழுச்சிப் பேரணியும் 'பொங்கு தமிழ்' நிகழ்வும் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஈழத்தமிழரின் உணர்வை உலகிற்கு உணர்த்தும் முகமாக திருகோணமலை பல்கலைக்கழக சமூகத்தினரும் திருகோணமலை மக்களும் இணைந்து இம்மாபெரும் பேரணியை நடத்துகின்றனர்.

பேரணிகள் நான்கு இடங்களில் இருந்து ஆரம்பமாகி திருமலை பெரிய முற்றவெளி மைதானத்தை அடையும். அங்கு மாபெரும் பொதுக் கூட்டம் இடம்பெறும்.

கூட்டத்தில் அமைச்சர் பெ.சந்திரசேகரன் உட்பட வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 9 ஆம், 10 ஆம் திகதிகளில் திருமலையில் நடத்தப்படவிருந்த பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு பின்னர் ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே. (ம)

# மெய்வன்மைப் போட்டிகள்

வடமராட்சி கிழக்கு,மார்ச்11

குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கே.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக அருட்தந்தை ஜே.அன்ரனி சுதாகரும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கஃஸ்பரபாதமும் கலந்துகொள்வர். (ம-182)

★ ★ ★

கோப்பாய்,மார்ச்11

உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை முன்றிலில் அதிபர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாக கோப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சிறிஸ்கந்தராஜா, உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய பங்குத் தந்தை அருட்திரு யே.அன்ரனிபாலா ஆகியோர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-72)

★ ★ ★

குருநகர்,மார்ச்11

யாழ்.கன்னியர் மடம் மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் அருட்சகோதரி மேரி டன்ஸ்ரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவு இணைப்பாளர் க.கணேசநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். அகவொளி குடும்ப வளநிலைய இயக்குநர் வணபிதா.எஸ்.ஜே.இராஜநாயகம் அடிகள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.(ம-51)

★ ★ ★

குருநகர்,மார்ச்11

கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மா.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.கோட்டக் கல்வி அதிகாரி ஆ.இராஜகோபால் கலந்துகொள்வார்.

வளன்புரம் அமலமரித்தியாகிகள் பெரிய குருமட அதிபர் அருட்தந்தை எம்.போல் நட்சத்திரம் சிறப்பு விருந்தினராகவும், கொழும்புத்துறை புனித சவேரியார் குருமட அதிபர் அருட்தந்தை ஜே.நீக்கிலஸ் அடிகள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். (ம-56)

# ஜனாதிபதிக்கு அடித்த அதிர்ஷ்டம்

நியூயோர்க்,மார்ச்11

நியூயோர்க்கில் எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் குழந்தைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் விசேட மாநாட்டில் முதல்நாள் முதல் உரை ஆற்றுவதற்கான அதிர்ஷ்டம் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குக் கிடைத்திருகின்றது.

இந்தச் சர்வதேச மாநாடு அமெரிக்காவில் நடைபெறுவதால் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் முதல் நாள் நிகழ்வில் உரையாற்றவிருக்கின்றார்.

இத்தகைய - பெரிய நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றுகின்ற - சர்வதேச மாநாடுகளில் முதல் நாள் ஆரம்ப நிகழ்ச்சியில் உரையாற்றுவது யார் என்பதில் பலத்த போட்டி நிலவுவது வழமை.

அதிர்ஷ்டச் சீட்டிழுப்பின் மூலம் எந்த நாட்டுத் தலைவர், எந்த நாளில் பேசுவது என்று முடிவு செய்வதுதான் வழமை.

அப்படி நடந்த சீட்டிழுப்பிலேயே முதல் நாள் முதல் உரை நிகழ்த்தும் வாய்ப்பு இலங்கை ஜனாதிபதி குமாரதுங்கவுக்குக் கிட்டியிருக்கிறது. (ம)

# வெலிக்கடை சிறை அதிகாரியை படுகொலை செய்வதற்கு முயற்சி

## நள்ளிரவுவேளை சம்பவம்

கொழும்பு,மார்ச்11

வெலிக்கடை சிறைச்சாலையின் பிரதம சிறை அதிகாரி சமத்தரத்ன அபேதுங்கவை சுட்டுக்கொல்ல மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

நேற்றுமுன்தினம் இரவு 11.55 மணியளவில் பொரளை லெஸ்லி ரணகல மாவத்தையிலுள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் அவர் இருந்தபொழுது இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்று பொரளை பொலீஸார் தெரிவித்தனர்.

மோட்டார் வாகனத்தில் வந்து தாக்குதல் மேற்கொண்டோர் தாக்குதல் முயற்சி தோல்வியடைந்ததால் அதே வாகனத்தில் தப்பிச் சென்றுள்ளனர். பிரதம சிறை அதிகாரி எதுவித காயமுமின்றி உயிர்தப்பினார். -

இச்சம்பவம் குறித்து பொரளை பிரதிப் பொலீஸ்மா அதிபர், பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரைக் கொண்ட குழுவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பான சந்தேகநபர்கள் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா கிருஷ்ணபிள்ளை

*(Retired S.R.D.O. வடகாடு - மாங்குளம்)*

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், வடகாடு, மாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய மேற்பார்வை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கந்தையா கிருஷ்ணபிள்ளை 09-03-2002 சனிக்கிழமை மாங்குளத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரரும் காலஞ்சென்ற அளவெட்டி கணேஸ் மற்றும் மல்லாகம் குஞ்சர், காலஞ்சென்ற கிளிநொச்சி சண்முகம் (ஹரிகிருஷ்ணா) ஆகியோரின் சகோதரரும் உயரப்புலம், ஆனைக்கோட்டை முன்னாள் கிராம தலைமைக்காரன் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் கிருஷ்ணானந்தா (ஆசிரியர் - வடகாடு), கிருஷ்ணவேணு (கிராம உத்தியோகத்தர் - வடகாடு), கிருஷ்ணகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவலலிதா (ஆசிரியை), ரஞ்சினி (ஆசிரியை) ஆகியோரின் மாமனும் செல்வராணி, லோகதாசன் (இளைப்பாறிய அதிபர் - பரம்சோதி மகா வித்தியாசாலை, கோண்டாவில்), சிவதாசன் (கனகபுரம்), திருநாவுக்கரசு (C.E.B., கொழும்பு), தில்லைநாதன் (M.P.C.S., மானிப்பாய்), கருணாகரன் (U.S.A.) கருணாதேவி, ஜெகநாதன் (A.G.A. Office, துணுக்காய்), ஜெயேந்திரராணி ஆகியோரின் மைத்துனரும் கீர்த்தனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-03-2002) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது வடகாடு, மாங்குளம் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வடகாடு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுப்பிரமணியம் தில்லைநாதன்
(செல்வம்)

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (1536)

## திருமதி நடராசா நாகம்மா

*(பொன்னரியம்)*

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா நாகம்மா (பொன்னரியம்) நேற்று (10.03.2002) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோ.கந்தையா - மீனாட்சிப்பிள்ளையின் அன்பு மகளும் நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற புனிதவதியின் அன்புத் தாயாரும் மங்களம்மா, காலஞ்சென்ற சண்முகதாஸ் மற்றும் கிருஸ்ணதாஸ், காலஞ்சென்ற நடராசா மற்றும் பரமேஸ்வரி, ராஜேஸ்வரி, சிவதாஸ், ஞானாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11-03-2002) திங்கட்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் வியாவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ.க.சிவதாஸ்
(சகோதரன்)

*கருங்காலி,*
*காரைநகர்.* (1537)

## சின்னத்தம்பி நவரத்தினம்

**(முன்னாள் பொது முகாமையாளர், தெல்லிப்பழை ப.நோ.கூ.ச.)**

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நவரத்தினம் (09.03.2002) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சாரதாதேவியின் அன்புக் கணவரும் இராமசாமி - இரத்தினமலர் ஆகியோரின் மருமகனும் நவதீபன், வாசுகி, ஜெயதீபன், பிரதீபா ஆகியோரின் அன்புத் தந்தையும் மங்களேஸ்வரனின் அன்பு மாமனாரும் மதுரனின் அன்புப் பேரனும் சரஸ்வதி தர்மேஸ்வரி, சாந்தவதனா, பஞ்சலிங்கம், விமலராணி (வசந்தா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2002) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விமலராணி (வசந்தா)
(மைத்துனி)

*பொற்பதி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில். T.P.No :- 01-719358* (1540)

# விளையாட்டு நிகழ்வுகள்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின 150ஆவது ஆண்டு விழாச்சபை தயா நகைப் பூங்காவின் அனுசரணையுடன் கல்லூரி மைதானத்தில் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று பி.ப. 3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், இருபாலை பாரதி அணியும் கோப்பாய் ஸ்ரார் அணியும் பங்குபற்றுகின்றன. (ஐ-3)

★ ★ ★

மக்கள் வங்கி வடலயத்தின் அனுசரணையுடன் யாழ்.மத்திய கல லூரி நடத்தும் கரம் சுற்றுப்போட்டி யில் 18வயது ஆண், பெண்களுக்கான ஆட்டங்கள் இன்று பி.ப.3மணிக்கு கல் லூரியில் இடம்பெறவுள்ளன. (ஐ-3)


## ஆயிரம் நாள் நினைவு தினம்

மலர்வு: 13 - 12 - 1980



உதிர்வு: 12 - 06 - 1999

### சோதிநாதன் சோபிநாத்

ஆனிமுத்தாய் ஆரமுதாய்
உன்தாய் வயிற்றில் முதல்வனாய்
மூத்தவனாய் அவதரித்து
ஆலமரமாய் திரிந்து படர்ந்து
ஆணி வேராய் ஊன்றி
எல்லோருக்கும் ஆதரவாய் இருப்பாயென
ஆவலோடு இருந்தோம் - ஆனால்
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
போன நாளும் ஆயிரம் நாளடா!

அன்னை "சிவகுல வீதி",
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தாய்,
சகோதரர்கள்.

(1545)


# கொக்குவில் மஞ்சவனப்பதி

## ஆலயத் திருப்பணி வேலைகளை மேற்பார்வை செய்ய பெறுநர்

யாழ்ப்பாணம்,மார்ச்11

கொக்குவில் மேற்கு மஞ்சவனப் பதி முருகன் ஆலயத்தில் இடம்பெறும திருப்பணி வேலைகளை மேற்பார்வை செய்வதற்கு பெறுநர் ஒருவரை யாழ். நீதிமன்றம் நியமித்துள்ளது.

இந்த ஆலயம் தொடர்பாக யாழ். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நம்பிக்கைச்சொத்து வழக்கை விசா ரணைசெய்த யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா பெறுநர் ஒருவரை நியமித்துள்ளார்.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன் றப் பதிவாளர் வே.நடராசா பெறு நராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் கோயிலுக்கு விஜ யம் செய்த அவர், சம்பந்தப்பட்டவர் களுடன் கலந்துரையாடியுள்ளார்.(ஐ-3)

## நிவாரணத்துக்கு கோறா அரிசி

அரியாலை,மார்ச்11

இடம்பெயர்ந்த மக்களுக்கு பெப ரவரி மாதத்திற்கான நிவாரணத்துக்கு 'கோறா' வெள்ளை அரிசி விநியோ கிக்கப்பட்டு வருகின்றது.

நிவாரண விநியோகத்துக்கு இம் முறை கோறா வெள்ளை அரிசியே கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளது. (ஐ-17)

## திறப்பு விழா

சாவகச்சேரி,மார்ச்11

அகதிகளுக்கான ஐ.நா.தூதரக உதவியுடன் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் சுமார் 15 லட்சம் ரூபா செலவில் நிர்மா ணிக்கப்பட்ட புதிய 'கிளினிக்' கட்டட திறப்பு விழா நாளை செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு வல் வெட்டித்துறை மாவட்ட வைத்திய சாலை வைத்திய அதிகாரி டாக்டர் க.மயிலேறும்பெருமாள் தலைமை யில் நடைபெறவுள்ளது. (ஐ-31)


## கண்ணீர் அஞ்சலி

எமது பல்கலைக்கழக அளவியல் விஞ்ஞானங்கள் பீட
3ஆம் ஆண்டு மாணவன் அன்புராசா அவர்களின்
அன்புத் தந்தையார்

### கணபதிப்பிள்ளை கோவிந்தசாமி

அவர்கள் மல்லாவியில் 09.03.2002 அன்று சிவபதம் அடைந்த செய்திகேட்டு நாம் மிகவும் துயரடைகின்றோம். சக மாணவன் *அன்புராசாவுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும்* ஆறுதல் கூறுவதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தமிழ் கலாசார மன்றம்,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

(1542)

## நாகம்ஸ் சுன்னாகம்

அஜீத், ஜோதிகா, யுக்தாமுகி
நடித்த
பூவெல்லாம் உன்வாசம்
(ரீலேஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)
12.03.2002 முதல்
எஜமான்
(சிவராத்திரியன்று விசேட காட்சிகள் காண்பிக்கப்படும்)

## கௌரவ கைத்தொழில் அமைச்சரை லங்கா சிமெந்து ஊழியர்களின் சந்திப்பு

லங்கா சிமெந்து சகல ஊழியர்களையும் (சுயவிருப்பு ஓய்வூதியத் தில்) இணைந்த, இணையாத அனைவரையும் நாளை (12.03.2002) காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

### கௌரவ கைத்தொழில் அமைச்சர் றோகித்த போபல்லாகம

அவர்கள் சகல தொழிலாளர்களின் பிரச்சினைகளை நேரில் கேட்டறிய விரும்புவதால் இச்சந்தர்ப்பத்தை தவறவிடவேண் டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

(C-21038) - செயலாளர்.

## யாழ்நகரில் நவீன வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட

### லொயலாஸ் கல்யாண மண்டபம்

சகல வசதிகளுடன் பாதுகாப்பான, அமைதியான சூழலில் அமைந்த மண்டபத்தில் திருமணங்கள், அரங்கேற்றங்கள், இன்னிசை நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள், ஒன்றுகூடல்கள் போன்றவற்றைச் சிறந்தமுறையில் நடத்திடவும், புரியாணி வகைகளை ஓடருக்கு மொத்தமாகப் பெற்றுக்கொள்ளவும் மற்றும் திருமணவைபவங்களுக்கு நாவுக்குச் சுவையூட்டும் உணவு வகைகள், சைவ, அசைவப் புரியாணி மற்றும் சிற்றுண்டி வகைகள், பலவகையான குளிர்பான வகைகள் மற்றும் திருமண கார், குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் போன்றவற்றையும் ஒரே இடத்தில் தரமாகவும் குறைவான விலைகளிலும் பெற்று உங்கள் நிகழ்வுகளை சிறப்பாக்கிட *நாடவேண்டிய ஒரே ஒரு முன்னணி இடம்:*

### லொயலாஸ் கல்யாண மண்டபம்

இல.59, சென்.பற்றிக்ஸ் வீதி, (சென்.பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக),
யாழ்ப்பாணம்.

தொடர்புகொள்ள தொலைபேசி இல. 2110, 3352

(C/21037)

"எங்கள் சேவை உங்கள் தேவைக்கே"

## மரண அறிவித்தல்

### சற்குணசிங்கம் பரமேஸ்வரி

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணசிங்கம் பரமேஸ்வரி நேற்று (10.03.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சற்குணசிங்கத்தின் (சிவம்) அன்பு மனைவியும், புவனேஸ்வரியின் சகோதரியும், கதிரமலையின் மைத்துனியும், இரவீந்திரன், சிவகுமாரன், பிறேமலதா, பாலகுமாரன், தயாபரன், கௌசிகா, காலஞ் சென்றவர்களான தசகுமாரன், தசிகுமாரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கணக்கர் வளவு,*
*கந்தரோடை.*

தகவல்:
க.கதிரமலை
(மைத்துனர்)


(1547)

## வீடியோப் படப்பிடிப்பாளர்

### முத்தொளி

யாழ். பல்கலைக்கழகத்தில் 16-03-2002 நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவை உட்புற வீடியோ படம் பிடிப்பதற்கு எமது நிறுவனத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது.

உங்கள் வாழ்வில் வரும் மறக்கமுடியாத நன்நிகழ்வுகளை காலம் காலமாகப் பார்த்து இன்புறும் வகையில் யாழ்ப்பாணத்தில் அதி நவீன DV 1000 Video Capture Card பொருத்தப்பட்ட கொம்பியூட்டரினால் 3D Animation Title மற்றும் புதிய புதிய Effect களைக் கொண்டு வீடியோப்படம் பிடித்திட



முத்தொளி

தில்லையம்பதி
கோண்டாவில்.

குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.

## ராஜா யாழ்ப்பாணம்

3ஆவது வாரம்
சேது புகழ் விக்ரம்,
காவேரி, மணிவண்ணன்
மற்றும் பலர் நடித்த
காசி
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
நாளை சிவராத்திரியை முன்னிட்டு
5 காட்சிகள்: 10.30, 2.30, 5.00
இரவு 9.00, நள்ளிரவு 12.00
(C/20908)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

C.E.L. பெருமையுடன் வழங்கும்
இளைய தளபதி, விஜய், மீனா
நடிப்பில்



ஷாஜகான்

ஷாஜகான்

*தினசரி காட்சிகள்:11.00,2.30,5.30(பு.நே.)*
சிவராத்திரியை முன்னிட்டு 12.03.2002
செவ்வாய்க் கிழமை மட்டும் 11.00, 2.30, 5.30
காட்சிகளோடு, இரவு 9.30, நள்ளிரவு 12.30
(புதிய நேரம்) காட்சிகள் காண்பிக்கப்படும்.
*: வெளியூர் ரசிகர்களுக்கு பஸ்
இலக்கம்: 782, 787, 736. (C/20909)



கொழும்பில் இருந்து வருகைதந்துள்ள லயன்ஸ் கழக 306 பி மாவட்ட ஆளுநர் உபாலி சமரசிங்க திருநெல்வேலி லயன்ஸ் கழகத்தை நேற்று அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். அச்சமயம் எடுக்கப்பட்ட படம்.

படத்தில் இடமிருந்து வலமாக பிரதி மாவட்ட செயலாளரும் பொருளாருமான சனத் வீரக்கொடி, மாவட்ட செயலாளர் எஸ். சிவானந்தன், மாவட்ட ஆளுநர் உபாலி சமரசிங்க, மானிப்பாய் லயன்ஸ் கழக தலைவர் செல்வி நவமலர் கனகரத்தினம், உப-மாவட்ட ஆளுநர் ஒறிகன் பீங்கி, மாவட்ட இணைப்பாளர் வி.முத்துக்குமாரசாமி, பிராந்திய தலைவர் எஸ்.நடராசா ஆகியோரை முதல் படத்திலும் -

நேற்றைய நிகழ்வில் கலந்துகொண்ட லயன்ஸ் பிரமுகர்களை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

*(படங்கள்:பொ.இராஜேஸ்வரன்)*

## ஆசிய நாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

* விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் கிளிநொச்சியில் அமைக்கப்படும் இணைப்புக் காரியாலயம் மூலமே மேற்கொள்ளப்படும்.
* சமாதானத்தைக் குலைக்கும் ஏதாவது ஒரு சம்பவம் குறித்து அறிவிக்கப்பட்டால் அதுபற்றி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிப்பதே கணகாணிப்புக் குழுவினரின் முக்கிய கடமையாகும்.
* சமாதானத்துக்கு இடையூறான செயல்களைத் தடுப்பது சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினரதும் பொறுப்பாகும்.
* ஏதாவது ஒரு தரப்பு தொடர்ந்து சமாதானத்தை சீர்குலைக்குமேயானால் கண்காணிப்புக் குழு அது குறித்து சர்வதேச சமூகத்திடம் பகிரங்கமாக அறிவிக்கும்.
* விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதான வழியைப் புறக்கணித்து, மீண்டும் ஆயுதம் ஏந்துமேயானால் அதைத் தடுக்க நோர்வே அரசுக்கு அதிகாரம் இல்லை.
* சமாதானப் பேச்சுக்கள் வெற்றி பெற இந்தியாவின் ஒத்துழைப்பு கிடைத்து வருகிறது. சமாதான முயற்சிகள் குறித்து இந்தியாவுக்கு பூரணமாக அறிவிக்கப்படுகின்றன.

- இவ்வாறு நோர்வே அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

(ஐ-3-4)

# கராட்டிப் போட்டியின் முடிவில் குழப்பம் விளைவித்த அணியினர்

யாழ்ப்பாணம்,மார்ச்11

'அக்கடமி ஒவ ஏறியன்டல் மாஷல் ஆட்ஸ்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற கராட்டி சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியின்போது தோல்வி அடைந்த அணி ஒன்றைச் சேர்ந்தோர் குழப்பம் விளைவிக்க முயன்றதாகக் கூறப்படுகிறது.

கறுப்புப்பட்டிக்கான இறுதி ஆட்டத்தில் தோல்வியைச் சந்தித்த வீரரின் அணியைச் சேர்ந்தோர் பல நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் கூடியிருந்த அந்த மண்டபத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தி இறுதி நிகழ்ச்சிகளைக் குழப்ப முயன்றுள்ளனர்.

இறுதிப் போட்டியை ரத்துச்செய்து பரிசளிப்பு வைபத்தை நடத்தவிடாமல் தடுக்க அவர்கள் முயன்றபோது பார்வையாளர்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டது. எனினும் அந்த நிகழ்ச்சியில் கலந்த சில பிரமுகர்கள் உடனடியாகத் தலையிட்டு பார்வையாளர்கள் வெளியேறுவதைத் தடுத்ததுடன் நிகழ்ச்சிகள் தடைப்படாமல் இறுதி வரை நடைபெற ஏற்பாடு செய்தனர்.

குழப்பம் விளைவித்த அணியினர் மண்டபத்தை விட்டு வெளியேற்றப்பட்டபின் இறுதிப்போட்டி மீண்டும் நடத்தப்பட்டு பரிசளிப்பு வைபவமும் சிறப்புற இடம்பெற்றது.

கராட்டி வீரர்கள் சிலர் கராட்டிக் கலையின் அடிப்படை நோக்கங்களுக்கு முரணாக நடந்துகொண்டமை பார்வையாளர்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

(ஐ)

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களையும் அரசியல் துறையினர் அனுப்பியுள்ளனர்.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் பிரதேசத்தையும் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளையும் மண்டூர், பட்டிருப்புப் பாலம், அம்பிலாந்துறை, மண்முனைத்துறை, வலையிறவுப் பாலம், செங்கலடி, கறுத்தப் பாலம், சந்திவெளித்துறை, கிண்ணையடித் துறை, கிரான்பாலம், மாங்கேணி ஆகிய பகுதிகளை இணைக்கின்றன.

அந்த இடங்களில் 600 மீற்றர் இடைவெளியில் இருதரப்பினரும் சோதனை நிலையங்களை அமைக்கவிருக்கின்றனர்.

(ஐ-3)

# அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுக்கு வழங்குவதாக கரிகாலன் உறுதியளித்தார்.

பட்டிருப்புப்பாலம் ஊடாகப் பொருள்கள் எடுத்துவருவதில் நிலவும் கெடுபிடிகள் குறித்து கரிகாலன் எடுத்து விளக்கினார்.

போதியளவு பொருள்கள் வந்து சேர்வதில்லை. ஒரு வகையில் பொருளாதாரத் தடை தொடர்ந்து அமுலில் இருக்கிறது என்றே கூறவேண்டும். அத்துடன் சுகாதாரம், கல்வி ஆகிய வசதிகள் இன்றி மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் பெரும் இன்னல்களை அனுபவித்த மக்கள், தொடர்ந்தும் இன்னல்களை அனுபவிக்க புதிய அரசு அனுமதிக்கக்கூடாது என்றும் கரிகாலன் கேட்டுக்கொண்டார்.

இந்தப் பிரதேச மக்களின் அவலங்களை நீக்க பிரதமருடன் உடனடியாகக் கலந்துரையாடவிருக்கிறேன். கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளைச்சேர்ந்த அமைச்சர்களை அடுத்த 10 நாள்களுக்குள் இங்கு அழைத்து வந்து மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவேன் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

அதைத் தொடர்ந்து அமைச்சர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அறநெறிப்பாடசாலைகள், அநாதை இல்லங்கள், அங்கவீனர் இல்லம், இராமகிருஷ்ண மிஷன், சிறைச்சாலை ஆகிய இடங்களுக்கும் அமைச்சர் விஜயம் செய்தார். (ஐ-3-4)

## பிரபாவுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர். 'வேலுப்பிள்ளை பிரபாகரன் மே/பா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அலரிமாளிகை, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3' என்ற முகவரிக்கே அந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

அலரிமாளிகை அலுவலர்கள் அந்த நோட்டீஸை ஏற்காமல் திருப்பி அனுப்பிவிட்டனர்.

'புலிகளின் தலைவருடன் உடன்படிக்கை செய்தவர் என்ற வகையில் அவர் இருக்கும் இடம் பிரதமருக்குத் தான் தெரியும்.

ஆகவே, பிரபாகரனுக்குரிய நோட்டீஸ் பிரதமர் மேற்பார்த்து அனுப்பட்டது' என்றார் சிஹல உறுமயத் தலைவர்.

இப்போது அந்த நோட்டீஸை 'கொழும்பில் உள்ள நோர்வே தூதுவர் மேற்பார்த்து' என்ற விலாசமிட்டு அனுப்பினால் என்ன என்பது குறித்து ஆலோசிக்கப்படுகின்றதாம். (ஐ)


உலகின் அதிக விற்பனையுள்ள முதல் தர சலவைப் பவுடர்

ஏரியல்

NEW ARIEL TOTAL COMPACT

ஏரியல்

- உடைகளுக்கு தீங்கு ஏற்படுத்தாத இலகு சலவைக்கு ஏற்றது.
- நறுமணமுள்ளதும் உடல் வியர்வையால் உடைகளில் ஏற்படும் பக்ரீரியாவுக்கு எதிரான தொற்றுநீக்கியாக தொழில்படும் பல சிறப்பு அம்சங்களை கொண்ட ஒரே சலவைப் பவுடர் ஏரியல் மட்டுமே.

முதல் தடவையிலே அதிக வெண்மை

தற்போது 25g, 500g, 1Kg பக்கெட்டுகளில் எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

இறக்குமதி செய்து விநியோகிப்போர்:
HEMAS MARKETING (PVT) LIT COLOMBO - 1



2004

பௌதிகவியல் | இணைந்த கணிதம்

ஆரம்பம்

கருணாநிதி — வியா. 3.30 p.m.

அம்பி — புதன் 6.15 a.m.

(1535) (அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்)

C.C.A. சுன்னாகம். கல்வியின் சிகரம்



### தேவை

கைதேர்ந்த பார்சல் மேக்கரும், சுவீற் மேக்கரும், சமையல் வேலை தெரிந்தவரும் உடன் தேவை.

தொடர்பு:

சரஸ்வதி விலாஸ்
195, K.K.S. வீதி,
(1538) யாழ்ப்பாணம்.



IIS இன் பழைய மாணவர்களுக்கான அவசர பொதுக்கூட்டம்

எதர்வரும் 23, 24, 25, 26ஆம் திகதிகளில் எமது நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் மாபெரும் கணனிக் கண்காட்சியை முன்னிட்டு எமது நிறுவனத்தின் பழைய மாணவர்களுக்கான ஓர் அவசரப் பொதுக்கூட்டம் *நாளை (12.03.2002) செவ்வாய்க் கிழமை பகல் 10மணிக்கு* தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. எனவே அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இயக்குநர்,
(C/21028) IIS, யாழ்ப்பாணம்.



LOGIC
A/L 2003
பகுதி II
விஞ்ஞானமும் வகையீடும்
ஆரம்பம்: இன்று 11.03.2002
Mon. - 5 p.m., Tue. 3 p.m.
(1544) By. P.கமல்
மதுபாரத்
இந்து மகளிர் ஒழுங்கை.



தவணைப் பரீட்சை
Gr. 3 - O/L வரை
முதலாம் தவணைப் பரீட்சை
18.03.2002 ஆரம்பம்
வினாப்பத்திரத்திற்கு
பதிவு செய்யுங்கள்
நல்லூர் சயன்ஸ் அக்கடமி



கணனி வேலை தெரிந்த பெண்கள் தேவை. நேரில் வரவும். (1539)



செல்வா ஹாட்வெயர்ஸ்

பித்தளை, அலுமினியம்

தரமான விலையில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கொள்வனவு செய்யப்படும்.

(C/20998) 120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



C.C.A. வணிகக் கல்வி

சுன்னாகம்

பகுதி I வினா-விடை

பகுதி II நுகர்வோர் பாதுகாப்பு

(1534) ஆரம்பம்: இன்று 4.00 p.m.

V.MURALEE B.B.A. (F.M.)


## மரண அறிவித்தல்

### கந்தையா சுப்பிரமணியம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (10.03.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் தனபாக்கியத்தின் அன்புக் கணவரும் பத்மலோஜினி, பத்மசீலன் (R.D.D.Engineer, Trincomalee), சத்தியசீலன் (Electrical Superitendant), தயாளசீலன் (Quantity Surveyor - London), குணசீலன் (Mascons - Jaffna), பிறேமசீலன் (Italy), தபோதினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற தட்சணாமூர்த்தி (S.S.O.), பவானி, ரதி, திருமகள், சகுந்தலாதேவி, சிவரஞ்சினி, ஜெயப்பிரகாசம் (Bio Medical Engineer) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹம்சவாகினி, வித்யவாகினி, சஞ்சீவன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), சிவதர்சினி, சுதர்சன், சகீலன், சஜீதரன், சசிவன், சுகீலன், ரஜீவன், கௌசிகன், ஹஜந்தி ஆகியோரின் பேரனும் அந்தியாவின் பூட்டனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்கிசை மிகிந்த மலர்ச்சாலையில் இன்று (11.03.2002) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் கல்கிசை, தெஹிவளை பொதுமயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
மனைவி: தனபாக்கியம்,
மருமகள்: ஜெயப்பிரகாசம்.

126, Hills Street,
Dehiwala.
Tel.: 718539. (C/21039)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.03.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.